தொகுதிச நூலகம்
... நகர சபை, யாழ்ப்பாணம்.

...tered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C638)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

...சு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 18 வெள்ளிக்கிழமை (01.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை - 184



(யாழ்ப்பாணம்)

தினமுரசினால் உலகக் கிண்ணப் போட்டிகளை முன்னிட்டு நடத்தப்பட்ட தினமொரு பரிசுப் போட்டியில் பங்குபற்றியவர்களில் வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு தினமுரசு காரியாலயத்தில் நேற்று நடைபெற்றபோது வெற்றியாளர்களைத் தெரிவுசெய்த சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப் பொன்ராஜா வெற்றியாளர்களின் பெயர் விபரங்களை தினமுரசு நிர்வாக இயக்குநர் ஸ்டாலின் அவர்களிடம் கையளித்தார். (மி)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலக வங்கியிடம் கடன்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யுத்தம் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக உலக வங்கியிடமிருந்து 38 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்தே மேற்படி கடனுதவி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (11 ஆம் பக்கம் பார்க்க)

# ...ல்லைக் கடலில் கடற்படைச் சிப்பாய்கள் மாயம்;

# ...ந்திய - இலங்கை கடற்படைகள் தீவிர தேடுதல்

(முல்லைத்தீவு)

**...முல்லைத்தீவு கடற்பரப்பில் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ...ற்படைச் சிப்பாய்கள் சிலர் மர்மமான முறையில் காணாமற்போயுள்ளனர். இத...னத் தொடர்ந்து இக்கடற்படைச் சிப்பாய்களைத் தேடும் நடவடிக்கையில் இலங்...கக் கடற்படை அணிகளுடன் இந்திய தென்பிராந்திய கடற்படையின் விசேட மீட்புப் ...டையணிகளும் இணைந்து கூட்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளன.**

...கடற்படைப் படகொன்றில் ...ல்லைத்தீவுப் பிரதேசத்தில் ...ருந்து கடலுக்குச் சென்ற 4 ...ற்படையினர் காணாமல் ...யுள்ளதாக கடற்படையினர் ...தெரிவித்துள்ளனர். இவர்கள் ...யணம் செய்த படகு நேற்றுக் காலை வெறுமையாக கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

படகில் பயணம் செய்த 4 கடற்படையினர் குறித்து இதுவரை எந்த தகவல்களும் கிடைககவில்லை என கடற்படை பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வடக்கில், சுண்டிகுளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை, பளை பிரதேசம் வரை கரையோரங்களில் உள்ள கடற்படை முகாம்களுக்கு தேவையான பொருட்களை ஏற்றிக்கொண்டு, இந்த கடற்படையினர் (11 ஆம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வுப் பணிக்கு 200 மில்லியன் செலவு

## அரசு கூறுகிறது

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில், புலிகள் அமைப்பின் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக 200 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பை மேற்கொள்வதற்காக, மாதாந்தம் ஒன்றுக்கு 50 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் (11 ஆம் பக்கம் பார்க்க)

# செக். பிரதமருடன் ...ஜீ.எல்.பீரிஸ் சந்திப்பு

(கொழும்பு)

...செக் குடியரசிற்கு விஜயம் மேற்...கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ...ஜீ.எல்.பீரிஸ் அந்த நாட்டின் பிரதி பிர...மர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ...கரெல் சிவசன்பேர்க் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதானம் மற்றும் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் தொடர்பாக செக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# குட்டி உள்ளூராட்சித் தேர்தல் எந்த நேரத்திலும் நடக்கும்

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

(கொழும்பு)



கலைக்கப்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஆறு மாத காலத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் (11 ஆம் பக்கம் பார்க்க)

# 'சுனாமி' ஒத்திகை

(கொழும்பு)

ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை ஒத்திகை நேற்று மாலை 14 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பில் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பமான இந்த ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை மூலம், ஆழிபேரலைகளின் போது மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைமைகள் தொடர்பாக (11 ஆம் பக்கம் பார்க்க)

# ...லிபிய வெளிவிகார அமைச்சர் இலண்டனுக்கு திடீர் விஜயம்

## உருமாறும் லிபிய நெருக்கடி

(கொழும்பு)

...லிபிய வெளிவிவகார அமைச்...மௌஸா கௌஸா, லண்...க்குச் சென்றுள்ளார். அவர் ...தலைவர் கேணல் கடாபி...ந்து பிரிந்துவிட்டதாகக் ...சப்படுகிறது.

...லிபியாவிலிருந்து இரு நாட்...ளுக்கு முன் டுடினிஷியாவுக்குச் ...சென்ற மௌஸா கௌஸா, ...நேற்றுமுன்தினம் இரவு லண்டன் ...சென்றடைந்தார். தான் இனியும் ...கணல் கடாபிக்காக பணியாற்றத் தயாரில்லை என பிரித்தானிய அதிகாரிகளிடம் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் பிரித்தானிய இராணுவ விமானம் என நம்பப்படும் விமானமொன்றில் வந்திறங்கியதாக தனது செய்தியாளர்கள் கூறுவதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

அவரிடம் பிரித்தானிய அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எனினும் அமைச்சர் மௌஸா கௌஸா பிரிந்து செல்லவில்லை எனவும் அவர் ராஜந்திர பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் லிபிய அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிரித்தானிய வெளிவிகார அமைச்சின் பேச்சாளர் கூறுகையில்,

மௌஸா கௌஸா தனது பதவியை ராஜினாமா செய்வதாக எம்மிடம் தெரிவித்துள்ளார். அவருடன் நாம் கலந்துரையாடல்களை நடத்திவருகிறோம். மேலதிக விபரங்களை உரிய தருணத்தில் வெளியிடுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

கடாபியை சுற்றியுள்ளவர்களிடம் அவரை கைவிட்டு, லிபிய மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய அரசியல் கைமாற்றத்தையும் உண்மையான மறுசீரமைப்பையும் அனுமதிக்கும் லிபியாவுக்கான சிறந்த எதிர்காலத்தை தெரிவு செய்யுமாறு நாம் ஊக்குவிக்கிறோம் எனவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

கடாபியின் நீண்டகால விசுவாசியாக விளங்கிய மௌஸா கௌஸா, லிபிய புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் கடாபியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான புலனாய்வுத் தகவல்களை மௌஸா கௌஸாவிடமிருந்து மேற்கு நாடுகள் பெறும் என நம்பப்படுகிறது.

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I,II இன் விடைகளும் கற்றல் குறிப்புக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

# உலகக் கிண்ண கிரிக்கெட் சமர் தினமுரசு நடாத்திய போட்டி

## வெற்றிபெற்றவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

தினமுரசினால் உலகக் கிண்ணக்கிரிக்கெற் போட்டியை முன்னிட்டு லீக் சுற்றுவரை நடாத்தப்பட்ட இருபத்தொன்பது தினமுரசுப் போட்டிகளிலும் மிகச் சரியான விடைகளை அனுப்பிய போட்டியாளர்களில் வெற்றியாளர்களை தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று பிரதான வீதியில் அமைந்துள்ள தினமுரசு தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றது.

இப் போட்டிகளில் வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டனர். இவ் வெற்றியாளர்களை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரிய பிதா ஞானப் பொன்ராஜா அவர்கள் தெரிவுசெய்தார்கள் இப் போட்டிகளில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:

**போட்டி இல 1** ச. மிறேன்ராஜ் - (பூனாறி வீதி கொக்குவில்), **போட்டி இல 2** இ. புனிதவன் (கிறிஸ்தவ இளைஞர் கல்லூரி மருதனார் மடம்), **போட்டி இல 3.** இ. ஸ்ரீகஜன் - சுன்னாகம்) **போட்டி இல 4** ர.நிசாதன் ( கோண்டாவில்), **போட்டி இல 5.** ப.ஈசனார் (மானிப்பாய்), **போட்டி இல 6.** பா. சந்தனேஸ்வரன் (கொக்குவில்), **போட்டி இல 7.** வ. தியாகராசா (காரைநகர்), **போட்டி இல 8.** பு. கஜிந்தன் (பூனாறிலேன்), **போட்டி இல 9.** த. தயாபரன் (ஓட்டுமடம்), **போட்டி இல 10** ச. சுகநிதி (கச்சேரி வீதி நல்லூர்) **போட்டி இல 11.** கு.கிருசாந்தி (பத்திரகாளிகோவிலடி), **போட்டி இல 12.** கே. அரேசேஸ்வரன் (கலைமகள் வீதி நல்லூர்), **போட்டி இல13** அ. கபிசன் ( பண்டத்தரிப்பு), **போட்டி இல 14** அ.கபீர்தன் (நாவலர் வீதி), **போட்டி இல 15** கோ. அஜந்தா (கணேசபுரம், கிளிநொச்சி) **போட்டி இல 16.** கு.அமுதிசன் (அரசடி வீதி கந்தர்டம்), **போட்டி இல17.** தி. கலைரூபன் (சேர்ச்லேன் நாவாந்துறை), **போட்டி இல 18.** ந. கோபிகுமரன் (சுழிபுரம்), **போட்டி இல 19** உ.ஜேறோஸ் (ஊர்காவற்துறை) **போட்டி இல. 20.** ச. மாதவி (சண்டிலிப்பாய்), **போட்டி இல 21.** அ.மேரிஏஞ்சல் (பிரதான வீதி யாழ்ப்பாணம்), **போட்டி இல 22.** பொ. கிருசாந்தன் (கிளிநொச்சி), **போட்டி இல 23** சம்சிகா ஸ்ரீதரன் (பெருமாள் கோவிலடி), **போட்டி இல 24.** ர.நிசாதன் (கோண்டாவில் கிழக்கு), **போட்டி இல 25.** நா. சுந்தரலிங்கம் (சண்டிலிப்பாய்), **போட்டி இல 26.** ச. மிறேன்ராஜ். (பூனாறிலேன் கொக்குவில்), **போட்டி இல 27.** அ.பொபி அனஸ்ரின் (கோவில் வீதி யாழ்ப்பாணம்), **போட்டி இல 28.** வே. குமரசாமி (கரவெட்டி), **போட்டி இல 29.** அ.ரதீசபெல் (கோவில் வீதி யாழ்ப்பாணம்)

இவ் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வின் விபரம் பின்னர் எமது பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

## பூம்புகாரில் கிராமிய அமைப்புக்கள் சம்பிரதாய பூர்வமாக நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார் பகுதிக்கான கிராம அபிவிருத்திச்சங்கமும் மாதர் அபிவிருத்திச்சங்கமும் நேற்று அங்குரார்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று பூம்புகார் பகுதியில் நடைபெற்ற அப்பகுதி பொதுமக்களின் ஒன்று கூடல் நிகழ்வொன்றிலேயே இவ் இரு பொது அமைப்புக்களும் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளர் அ. ரவிந்திரதாசன் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி. பா. மாலினி, கிராம அலுவலர் ஸ்.விஜிதரன் கடற்தொழிலாளர் சங்கத்தலைவர் வி.சிறிகணேசராஜா மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (பா)

## நூற்றாண்டு விழா கண்காட்சி

(அச்சுவேலி)

யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கல்விக் கண்காட்சி எதிர்வரும் 03ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 05 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. பாலசுப்பிரமணியமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியை பார்வையிட விரும்பும் பாடசாலைகள் முன்கூட்டியே பதிவு செய்து அதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ளுமாறும் இதற்கான அனுமதிகள் யாவும் இலவசம் எனவும் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (03)

## வலயமட்ட விளையாட்டுப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முதல் மேமாதம் 3ஆம் திகதி வரை பல்வேறு பாடசாலை மைதானங்களில் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு 19 வயது ஆண்களுக்கான மென்பந்துப்போட்டி சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு 19 வயது பெண்களுக்கான மென்பந்துப்போட்டி சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (11)

## வருடாந்த விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் த. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபையின் யாழ். பிராந்திய முன்பள்ளி பகல் பராமரிப்பு நிலைய திட்டப்பணிப்பாளர் வணக்கத்துக்குரிய அன்ரனி சுதாகர்,தென்மராட்சி வலயஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் அ. மனோரஞ்சிதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (11)

## பட்டிமன்றக்குழு நடாத்தும் பேச்சுப்போட்டி

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தில் பேச்சுக்கலையை வளர்க்கும் நோக்குடன் யாழ். பட்டிமன்றக்குழுவினரால் பேச்சுப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

திறந்த போட்டியாக நடத்தப்படவுள்ள பேச்சுப்போட்டிக்கான தலைப்பு போட்டி நடைபெறும் இடத்தில் போட்டி ஆரம்பிப்பதற்குச் சில நிமிடங்களின் முன்பு வழங்கப்படும். இப்போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை எதிர்வரும் ஏப்பிரல் மாதத்திற்கு முன்னதாக சொல்வேந்தர் பொன் சுகந்தன், தலைவர் யாழ். பட்டிமன்றக்குழு 5/2 வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாண[illegible] என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாமென யாழ். பட்டிமன்றக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (10,60,)

## ஆரம்பபிரிவு மாணவர்களுக்கான விசேட போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உறுப்பெழுத்துப்போட்டியும், துரித கணித செய்கைப் போட்டியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் காலை 8.30 மணிக்கு தரம் 1-5 வரையான வகுப்புக்களுக்கு உறுப்பெழுத்துப் போட்டியும், காலை 9 மணிக்கு தரம் 2-5வரையான வகுப்புக்களுக்கு துரித கணித செய்கையும் இடம்பெறவுள்ளதாக தென்மராட்சி வலய ஆரம்பக் கட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (11)

## குளிர்த்தி உற்சவம்

(ஆனைக்கோட்டை)

நவாலி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி உற்சவம் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது. (104)

## இந்த வாரம் ஓய்வூதியம்

(ஆனைக்கோட்டை)

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 7ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

## திறன் விருத்திச் செயலமர்வு

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய கணிதபாட ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. செயலமர்வுக்கு சமூகமளிக்கும் குறித்த பாட ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையில் தரம் 9,11 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர் தொகையையும் தவறாது எடுத்துவருமாறு வடமராட்சி வலய கணிதபாட உதவிக்கல்விப்பணிப்பாளர் ம. ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார். (100)

## இந்தியாவுக்கு ஜனாதிபதி விஜயம்

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான உலக கிண்ண இறுதி கிரிக்கெட் போட்டியை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே அவர் இந்தியா செல்வதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.இதற்கிடையில் ஜனாதிபதி போட்டியை பார்வையிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடக பணிப்பாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி இந்தியா செல்வதற்கான சகல ஏற்பாடுகளை இந்திய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியை கண்டு களிப்பதற்கு இந்திய ராஸஷ்ரபதி பிரதீபா பட்டேல் சமூகம் தரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## புனித யாத்திரை

(யாழ்ப்பாணம்)

தற்போது தவக்காலம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், பாஷையூரில் வாழும் கத்தோலிக்க மக்கள் ஒன்றிணைந்து தவக்காலயாத்திரையாக ஹினிதுமவில் அமைந்துள்ள சிலுவைப்பாதை யாத்திரைத் தலத்துக்கும், வவுனியாவில் உள்ள கல்வாரித் திருத்தலத்துக்கும் புனித யாத்திரையாக எதிர்வரும் வியாழக் கிழமை புறப்பட்டு செல்லவுள்ளனர்.

3 தினங்கள் அங்கு தங்கியிருந்து தமது வழிபாடுகளை மேற்கொண்டுவிட்டு மறுநாள் சனிகிழமை மீண்டும் தமது சொந்த இடத்துக்குத் திரும்பவுள்ளனர். (21)

## கழகங்களுக்கிடையிலான இறுதிப்போட்டி

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியின் இறுதிப்போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கும் வரணி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

**எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.**

**1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?**

**2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?**

பெயர்: ..............................

முகவரி : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

**உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.**

**தினமுரசு காரியாலயம்**
**373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தினமுரசு விளம்பரப்பணிமனை**
**M.P.C.S. கட்டடம்**
**137, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.**

**இலட்சியம் இல்லாத மனிதன் மனிதனே அல்லன். இலட்சியத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையே ஆகாது.**

-மாஜினி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம்

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யுத்தம் ஒரு போதும் தீர்வாக அமைய முடியாது என்றும், சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒன்றுபட்டு புரிந்துணர்வுடனான பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும் என்பதும் பெரும்பாலான தமிழ் மக்களின் விருப்பமாக இருந்தது.

மக்களின் விருப்பத்திற்கு மாறாக முன்னெடுக்கப்படும் தீர்வு முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்கமாட்டாது என்று கருதுவோரும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற போலியான போர்வைக்குள் தமிழரசுக் கட்சி, ஆயுதக்குழுக்களாக இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), அரியநேத்திரன் எம்.பி போன்றோர் ஒளிந்து நின்றுகொண்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள். அரசாங்கத்துடன் இரண்டு மூன்று சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்ட இவர்கள் ஒவ்வொருவரும், தங்கள் தங்களின் தனித்துவமான கொள்கை வழிநின்றே பேச்சுவார்த்தை தொடர்பான அறிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு விடுத்து வருகின்றார்கள்.

☆ அரசினால் தரமுடியாத எதனையும் தாருங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. தரக்கூடியவற்றைத்தான் நாம் கேட்கின்றோம். நாம் கேட்பது உண்மையான அதிகாரப் பகிர்வைப் பற்றியதே -ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) சுரேஷ் பிரேமச்சந்திரன்.

☆ தமிழ் மக்களின் இழந்த உரிமைகளையே வென்றெடுக்க அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றோம். இதனை எமது பலவீனம் என்று கருதக்கூடாது - செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ).

☆ அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுக்கு அடிப்படையான யோசனைகளையே இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளோம் - மாவை சேனாதிராசா (தமிழரசுக்கட்சி).

☆ வடக்கும், கிழக்கும் இணைந்த சுயநிர்ணய ஆட்சி என்னும் அடிப்படைக் கொள்கையுடனேயே அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பு ஈடுபடும். நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

மேலே கூறப்பட்ட நான்கு வெவ்வேறு துருவங்களும் இணைந்துதான் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. பேச்சுவார்த்தைக்குச் செல்லும் இவர்களிடம் அரசினது நிலைப்பாட்டை துல்லியமாக ஜனாதிபதி எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஏதோ சந்தர்ப்பவசத்தால் இணைக்கப்பட்ட இவர்களுக்கு தமிழ் மக்களின் ஒன்றிணைந்த ஆதரவு வழங்க வேண்டுமென்று புலிகள் உத்தரவிட்டிருந்ததாகவும், அந்த உத்தரவையே இப்போதும் மக்கள் கடைப்பிடித்து வருவதாகவும் சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளமையை தமிழ் மக்கள் நினைவுகூர வேண்டும்.

அரசியல் கோமாளிகளாகத் தமிழ் மக்கள் மத்தியில் பவனிவரும் இவர்கள் ஜனாதிபதி கோருவது போல் எத்தகைய தீர்வுத்திட்டத்தை இவர்கள் ஒன்றிணைந்து சமர்ப்பிக்கப் போகிறார்கள்?

கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் தலைவர்களும், கட்சித் தலைவரும் இதுவரை காலமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுக்குரிய தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து மக்கள் அங்கீகாரத்துக்கு விட்டதில்லை.

ஆனால், நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முகங்கொடுத்த இவர்கள், கூட்டமைப்பு அரசுடன் மேற்கொள்ளும் பேச்சுவாாத்தையை வலுவூட்டுவதற்கும் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கும் வாக்களியுங்கள் என்றும் சம்பந்தன் சென்னையில் இருந்து அறிக்கை விட்டமை மக்கள் இன்னமும் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்நிலையில் அன்று தொட்டு இன்று வரை ஒரே கொள்கையின் கீழ் நின்று நேர்மையுடன் அரசியல் நடத்திவரும், வருபவர்களைப் பரிகாசம் செய்யாது அவர்களுடன் இணைநது செயற் பட முன்வருவதே ஆரோக்கியமான அரசியல் பயண மாகும்.

இதனை உணர்ந்து சந்தர்ப்பவாதப் போர்வைக்குள் நின்று பேச்சுவார்த்தை என்னும் மயாஜாலம் காட்டி தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முனைய வேண்டாம்.

இதுவே கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்கள் விடுக்கும் செய்தியாகும்.

-ஆசிரியர்-

# கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் “நெக்டெப்” செயற்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கரையோரப் பிரதேச மக்கள் மற்றும் கிராமப் புற, நகர்ப்புற மக்களினதும் அடிப்படை வாழ்வாதாரப் பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பல்வேறு சுய தொழில் அபிவிருத்தித் திட்டங்களை யாழ். மாவட்டடத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் ஊடாக முன்னெடுத்துச் செல்வதற்கு நெக்டெப் செயற்படுத்த முன் வந்தள்ளதாக நெக்டெப் திட்டப் பணிப்பாளர் குரூஸ் தெரிவித்துள்ளார்.

கைதடியில் அமைந்துள்ள உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூரில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன், வேலை இல்லாப் பிரச்சினைத் தீர்வுக்கும் வழி வகுக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

கரையோரப் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காண்பதற்காகவே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம், வேலணை ப.நோ.கூ.சங்கம், யாழ. மாவட்ட கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.ரவீந்திரன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மூடப்பட்ட 95 வைத்தியசாலைகளை மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இலங்கையில் பல்வேறு காரணங்களால் 95 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு மூடப்பட்ட வைத்தியசாலைகளை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே பெருமளவு வைத்தியசாலைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளதாகவும், இதற்குக் காரணம் வைத்தியசாலை ஊழியர்கள் அந்த வைத்தியசாலைகளுக்குப் பணிக்குச் செல்ல மறுத்ததே எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மூடப்பட்ட சில வைத்தியசாலைகள் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ளன. இந்த வைத்தியசாலைகள் மூடப்படுவதற்கு, நிர்வாகத்தின் அசண்டையீனமே காரணமாகும். சுமார் 150 வைத்தியசாலைகள் பெருந்தோட்டக் கம்பனிகளின் ஆளுகைக்குள் உள்ளன. இதில் 110 வைத்தியசாலைகளை சுகாதார அமைச்சுப் பொறுப்பேற்றுள்ளது. இந்த வைத்தியசாலைகள் தற்போது எவ்வித இடையூறுமின்றிச் செயற்படுகின்றன.

தற்போது இயங்காதுள்ள வைத்தியசாலைகளை இயங்கவைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பாடசாலை, பொதுஇடங்கள், வீதிகள், திணைக்களங்கள் என பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பாடசாலை மாணவர்களின் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# இரண்டு நெற் களஞ்சியங்கள் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கிளிநொச்சியில் 2 நெற் களஞ்சியங்கள் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்த இந்நெற் களஞ்சியங்கள் தற்போது மீளவும் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்ட நெற்களஞ்சியத்தை கூட்டுறவு உள்ளூராட்சி வர்த்தக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

மற்றைய நெற் களஞ்சியம் வட்டக்கச்சியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நெல் சந்தைப் படுத்தல் சபையின் தலைவர் கே.பி. ஜயசிங்க, போரூட் நிறுவன அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் நெல்சந்தைப்படுத்தல் சபை இல்லாததால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், தற்போது திறந்து வைக்கப்பட்ட இந்நெற்களஞ்சியங்கள் மூலம் தமது நெல்லை நியாய விலையில விற்பனை செய்ய முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (28)

## உருத்திரபுரம் செல்லும் பிரதான பாலம் சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரத்தில் இருந்து உருத்திரபுரத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதாகவும், இதனால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மிகநீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத இப்பாலம் தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டிருநத நிலையிலேயே மீளவும் அப்பாலம் மிக மோசகமாகச் சேதமடைந்துள்ளதால் கனரக வாகனப் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவே இதனைப் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

## ஆசிரிய ஆலோசகர்கள் இன்மையால் விஞ்ஞான,கணித ஆசிரியர்கள் சிரமம்

(வடமராட்சி)

துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர்களுக்குப் பற்றாக குறை நிலவுவதாகத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் ஆலோசனைகளை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக 12 ஆசிரிய ஆலோசகர்கள் தேவையாகவுள்ள நிலையில் 4 ஆசிரிய ஆலோசகர்கள் மட்டுமே கடமையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பாடங்களின் ஆலோசனைகளைப் பெற முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்த நிலையில் தற்போது இப்பிரதேசத்தில் அவர்கள் மீளக்குடியேறி வாழ்ந்து வருவதுடன் மாணவர்களும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இப்பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு ஆசிரிய ஆலோசகர்களின் பணி முக்கிய தேவைப்பாடாக உள்ளதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (100)

# என்றிப் திட்டத்தின் கீழ் அரியாலையில் இரண்டு பாடசாலைகள் புனரமைப்பு

## ஈ.பி.டி.பியின் நல்லூர் அமைப்பாளர்



(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை, பூம்புகார் அ.த.க பாடசாலை என்பன என்றிப் திட்டத்தின் கீழ் 12.35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் தெரிவித்தார்.

இவ் இரு பாடசாலைகளும் கடந்த யுத்தகாலத்தின்போது முழுமையாகச் சேதமடைந்திருந்தது. தற்போது இப்பகுதிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினால் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதிகளில் மீள்குடி யேறிய மக்களின் நன்மை கருதி அரியாலை அ.த.க. பாடசாலை 9 மில்லியன் ரூபா செலவிலும், பூம்புகார் அ.த.க. பாடசாலை 3.35 மில்லியன் ரூபா செலவிலும் என்றிப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் இந் நிர்மாணப் பணிகள் முடிவடையும் வரை மேற்படி பாடசாலைகள் வேறு ஓர் கட்டடத்தில் இயங்குவது குறித்து, பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

மேலும் இப்பகுதிகளிலிருந்து மாணவர்கள் நீண்டதூரம் சென்று புறநகர்ப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(பா)

## ஆராய்ந்தே அங்கீகரி!

இன்று முட்டாள் தினமாகும்
இதனை எண்ணிக் கொள்ளுங்கோ,
கன்றும் குட்டி போட்டதென்றே
கதை அளப்பர் கவனமுங்கோ!

கடந்த காலங் களிலெல்லாம்
கயிறு கோலாய் மாறியதென்றும்
கிடந்த பிணமோ எழுந்ததென்றும்
கில்லாடி விடுகை மெத்தவுண்டு!

வானம் கீழ்நோக்கி வருகிறதாம்
வால்நட் சத்திரம் வீழ்கிறதாம்,
பூனம் மாமியும் ஆணானாள்
பூவுலகும் அழியப் போகிறதாம்!

காலை புலரக் கதைபரவும்
காலம் தோறும் இது தொடரும்,
வேலை இல்லாப் பேர்வழிகள்
வேணு மெண்டே சொல்லித்திரிவர்!

எங்கள் கலாசார மிதுவல்ல
ஏப்ரல் பூலெனும் பண்பாடோ,
எங்கோ மேற்குலக வழிவந்த
எதேச்சை யானதாம் நடைமுறையே!

எதற்கும் நீயோ விழிப்பாயிரு
எந்தத் தகவல் கிடைப்பினுமோ,
அதனைத் தீரவே ஆராய்ந்து
அங்கீ கரிக்கப் பழகிக்கொள்!

மூலபாரதி

# சின்னஞ்சிறு செய்திகள்

## தேர்த் திருவிழா

(திருநெல்வேலி)

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரியம்பாளின் மஹோற்சவப் பெருவிழா கடந்த பதினைந்து தினங்களாக நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை தேர்த திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (60)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ். நிருபர்)

யாழ்.அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி புதுவருடப் பிறப்பு தினத்தில் காலை 8 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

திருவிழா நடைபெறும் நாட்களில் தினமும் நண்பகல் 12 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். (10)

## ஞானச்சுடர் வெளியாகவுள்ளது

(யாழ்.நிருபர்)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியிடும் மாதாந்த சஞ்சிகையான 'ஞானச்சுடர்' பங்குனி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இலங்கையில் உள்ள புகழ பெற்ற எழுத்தாளர்களின் கட்டுரைகளும், தமிழகத் திருக் கோயில் வரலாறும் இச் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## 10 இல் திறக்கும்

(கொக்குவில்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும் நிலையங்களைத் திறக்க அனுமதித்துள்ளதென சங்கத் தலைவர் அ.அல்பேட் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று அரச வங்கி வர்த்தக விடுமுறை தினமாகும். அன்றைய தினம் கைவிசேஷம் வாங்குவதற்காக விரும்பிய நிலையங்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (68)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்.நிருபர்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள் இன்று முதலாம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் 'சிந்தனைசெய்' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (10)

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மொழிஅறிவுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்

(அச்சுவேலி)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

பிரிவு 1 தரம் 3 -5

கு.தேனுஜன் (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ச.விதுசிகன் (புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை), வீ. ஆர்த்திகா (கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்).

பிரிவு -2 தரம் 6-8

து.சண்சியா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), தே.சுலக்சனா (கோப்பாய் நாவலர் வித்தி.), சி.சந்திதா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), மு.தினுஜன் (புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தி), இருவர் மூன்றாமிடம்.

பிரிவு - 3 தரம் 9-11

சி.திலக்சனா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.), மு.நிலக்சன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஸ்ரீ தர்சன் (கோப்பாய் சரவண பவானந்தா வித்தி), வே.கிருஷ்ணவி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இருவர் மூன்றாமிடம்.

பிரிவு - 4 தரம் 12-13

அ.ரம்யா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), தி.நிரோஜா (அச்சுவேலி மத்திய கல்லூரி), அ.வொலஸ்ரீன் யூலியா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ரா.சுபேக்கா (உரும்பிராய் இந்துக் கல்லூரி) இருவர் மூன்றாமிடம்.

பொது அறிவுப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு -

பிரிபுர் -1

ம.நீருஜி (கோப்பாய் நாவலர் வித்தி), ம.அமுதவிழி (கோப் பாய் நாவலர் வித்தி), வ.ரிஷி சங்கர் (புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை), யோ.லிண்டா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ப.சிந்தூரா (அச்சுவேலி மத்திய கல்லூரி), இ.கலைப்பருதி (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்).

பிரிவு 2 -

க.திவ்யா (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), த.கோபிகா (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), தே.சுஜித்தா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), கி.துசாந்தி (அச்சுவேலி தெரேசாள் மகளிர் கல்லூரி).

பிரிவு -3

தி.தர்சனா., அ.அனஸ்ரிகா, க.லாவண்யா (உரும்பிராய் இந்துக் கல்லூரி),

பிரவு - 4

கு.சென்போல் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), யு.லம்சா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ச.சுரேகா (அச்சுவேலி மத்திய கல்லூரி). (03)




அரியாலை பூம்புகார் பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புகளினூடாகச் செல்லும் 1300 மீற்றர் நீளமான மண் அரண், நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் அ.ரவீந்திரதாசனின் மேற்பார்வையின் கீழ் கனரக இயந்திரத்தின் உதவியுடன் தகர்க்கப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழியேற்படுத்தப்படுவதினை இப்படங்களில் காணலாம். (படம்:தமிழ்வாணன்)

# கந்தபுராணத்தை அடியொட்டியே யாழ்ப்பாணக் கலாசாரம் பிரதிபலிக்கிறது

## விரிவுரையாளர் லலீசன் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

இந்து சமயத்தின் எழுச்சி சிறப்படைய வேண்டுமாயின் நிறுவனமயப்பட்ட சமய வளர்ச்சி ஏற்படவேண்டும். இந்த விடயத்தில் அந்தணப் பெருமக்கள் அதிகளவில் அக்கறை செலத்த வேண்டும். இத்தகைய நிறுவன மயப்படுத்தலில் காஞ்சித் திருமடம் சிறந்த பங்களிப்பினை வழங்க வேண்டும்.

நீர்வை தி.மயூரகிரிசர்மா எழுதிய கருணை நிறை காமாட்சி என்ற நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்தும் போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறைத்தலைவர் தி.வேல்நம்பி தலைமையில் நீர்வேலி காமாட்சி அம்பாள் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் விரிவுரையாளர் லலீசன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

யாழ்ப்பாணத்துக்குரிய கலாசாரம் கந்தபுராணத்தைச் சார்ந்தது எனப் போற்றுகிறோம். ஈழத்தில் புராணபடல மரபை அறிமுகஞ் செய்தவர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கச்சிக் கணேசையா ஆகும்.

எம்மவர்கள் தமிழ்நாட்டிலுள்ள தருமபுரம், திருவாவடுதுறை போன்ற ஆதீனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள போதிலும் காஞ்சிபுரம் சங்கரமடத்துடன் தொடர்புகளைப் பேணுவது அரிதாகவே உள்ளது.

காஞ்சி சங்கரமடம் இந்துக்களின் தலைமை நிலையமாகக் கொள்ளக்கூடிய தகைமைக்குரியது. இந்து சமயத்தின் அதிகாரத்துவக் குரலாக சங்கர மடத்தின் குரலே உலகெங்கும் ஒலிக்கிறது. இந்நிலையில் காஞ்சிபுரத்துக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான உறவுகள் இன்னும் மேம்படுத்தப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவராக விளங்கிய அமரர் பேராசிரியர் நா.கைலாசநாதக் குருக்கள் காஞ்சிப் பெரியவர் மீது பஞ்சரத்தின கீர்த்தனைகள் பாடிச் சமர்ப்பித்திருந்தார். அந்த வரிசையில் இந்த நூலாசிரியர் தி.மயூரகிரி சர்மாவும் பஞ்சரத்தின ஸ்தோத்திரங்களை ஆக்கி ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு அர்ப்பணித்து ஆசி பெற்றுள்ளார் என்றார்.

நூலினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பொ.இராசலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீ முரளிதரன், காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபைச் செயலாளர் த.பரமராச சிங்கம் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். (10)

# செம்பியன் செல்வன் நினைவாக சிறுகதைப் போட்டி நிகழ்வு

(கொக்குவில்)

பிரபல எழுத்தாளர் ஆ.இராஜகோபால் (செம்பியன் செல்வன்) ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியை 'ஞானம்' சஞ்சிகை எழுத்தாளர் குடும்பத்தின் அனுசரணையுடன் நடத்துகிறது.

முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக 3 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவிருக்கிறது.

ஆறுதல் பரிசாக மேலும் ஒன்பது சிறுகதைகள் தெரிவு செய்து பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

நிபந்தனைகளாக கதைகள் முன்னர் பிரசுரமானவையாக இருக்கக்கூடாது. எழுதுபவரின் பெயர், முகவரி கதைப் பிரதியில் எழுதப்படாமல் தனியாக இணைக்க வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல மூலையில் அமரர் 'செம்பியன் செல்வன் ஞாபகார்த்தப் போட்டி' எனக் குறிப்பிட்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக 'ஞானம் கிளை அலுவலகம், 3 B, 46 ஆவது ஒழுங்கை, கொழும்பு -06 என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (68)





மத்திய சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய சுகாதார சிறப்பு விருது வழங்கல் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது ஆதார, பொது வைத்தியசாலைகளுக்கிடையிலான போட்டியில் 2 ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்ற பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க.நந்தகுமார், முகாமை மட்டங்களுக்கிடையிலான போட்டியில் 3 ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற யாழ். சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிமனைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து விருதுகளைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.



வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் புதிய தையல் பயிற்சி நிலையமொன்றை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் திறந்து வைப்பதைக் காணலாம். (69)

# கணித அறை திறப்பு விழா

(வடமராட்சி)

கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உபகரணங்களுடன் கூடிய கணித அறை திறப்பு விழாவும் பரிசில் வழங்கும் வைபவமும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் 2010 ஆம் அண்டு வலயமட்ட கணித விநாடி வினாப் போட்டியில் முதன் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

# வேலையற்றிருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டோர் பதிவு செய்யவும்

(தொல்புரம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தொடர்பான விபரங்கள் கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - குறித்த கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளது முழுப் பெயர், முகவரி, குடும்ப அங்கத்தவர் எண்ணிகைகை, கல்வித்தகைமை போன்ற விடயங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத 18 வயதிற்கு மேற்பட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் தமது பகுதி கிராம அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (26)

# விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி

(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, பிரதித் திட்டப் பணிப்பாளர் ச.குகதாஸ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் க.கனகராஜா, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி சி.ரூபசிங்கம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் ஆர்.குணநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (08)

# முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி

(கோப்பாய்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஐங்கரனும், கோண்டாவில் இராணுவ கட்டளை அதிகாரி ஆர்.எம்.பி ரட்ணாயக்கா, குப்பிளான் தபால் நிலைய உபதபாலதிபர் திருமதி வசந்தகுமாரி தவேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (08)

## ஆதினியின் இன்றைய பலன்

(01.04.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 18

இராகுகாலம் 10.41 – 12.11, சுபநேரம் 6.11 – 7.41

திரயோதசி பி.ப.4.38, சதயம் மு.ப 9.52,

சித்தம், ஏப்ரல் பூல் தினம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** மனமகிழ்ச்சி, எதிலும் வெற்றி, கொண்டாட்டம்.

**ரிஷபம்:–** தொழிலால் லாபம், நண்பர் சேர்க்கை, தனவரவு.

**மிதுனம் :–** நண்பர் விரோதம், குடும்பத்தில் நிம்மதிக் குறைவு, வாக்குவாதம்.

**கடகம்:–** நோய் அதிகரிப்பு, அதிக செலவு, விரோதம்.

**சிம்மம்:–** மனநிம்மதி, தெய்வ வழிபாடு, ஆரோக்கிய மிகுதி.

**கன்னி :–** பொருள் இழப்பு, வாகன விபத்து, மனக்கிலேசம்.

**துலாம் :–** அதிக செலவு, குடும்பக் கலகம், எதிரிகளால் தொல்லை.

**விருச்சிகம்:–** மதிக்கப்படல், குதூகலமான நிகழ்வு, பயணம்.

**தனுசு:–** சோம்பல் மிகுதி, ஆரோக்கியக் கேடு, அதிக செலவு.

**மகரம்:–** பகைவரால் தொல்லை, முற்கோபம், விதண்டாவாதம்.

**கும்பம் :–** அரிய செயல் செய்தல், பொருள் வரவு, நண்பர் உதவி.

**மீனம்:–** தொழில் ஆர்வம், முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி.

# நான்கு கடற்படையினருடன் சென்றபடகு பாக்குநீரிணை கடற்பகுதியில் மாயம்



(கொழும்பு)

கடற்படையின் படகு ஒன்று நான்கு கடற்படையினருடன் பாக்கு நீரிணையில் மாயமாகியுள்ளது.

காணாமற்போயுள்ள இந்த இலங்கைக் கடற்படைப் படகையும் அதிலிருந்த கடற்படையினரையும் தேடிக் கண்டுபிடிக்க இலங்கை அதிகாரிகள் இந்தியாவிடம் உதவி கோரியுள்ளதாக பி.ரி.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

காணாமற்போயுள்ள இந்த கடற்படைப் படகு பாக்கு நீரிணையில் மூழ்கியிருக்கலாம் அல்லது ஏதாவது விபத்தில் சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

காணாமற்போயுள்ள இலங்கைக் கடற்படைப் படகையும், அதிலிருந்த நான்கு கடற்படையினரையும் தேடிக் கண்டுபிடிக்க உதவுமாறு இந்திய கடற்படையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்று முன்தினம் மாலை இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க 650 படகுகளில் புறப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களிடம், இலங்கைக் கடற்படைப் பட்கு பற்றிய தகவல் எதையும் அறிந்தால் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு இந்திய அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

அதேவேளை காணாமற்போன இலங்கைக் கடற்படையினர் தொடர்பாக அவதானமாக இருக்கும்படி, தமிழ்நாடு கரையோர காவல்துறையும், தமிழ்நாடு காவல்துறையின் கியூ பிரிவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

# மலேசியாவிலுள்ள இலங்கை அகதிகள் இரகசியமாக திருப்பி அனுப்பப்படும் நிலை

(கொழும்பு)

மலேசியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சட்டபூர்வ வதிவிட அனுமதிப் பத்திரம் அற்ற நிலையில் அங்குள்ள பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு இரகசியமாகத் திருப்பி அனுப்பப்படும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அகதிகள் பதிவட்டை சட்டரீதியான பதிவற்றதாகும். இதனால் அவர்கள் உள்ளூர் பொலிஸாரால் கைது செய்யப்படக் கூடிய நிலை காணப்படுகிறது. இதனால் வெளியில் செல்ல முடியாத நெருக்கடி நிலையில் அவர்கள் உள்ளனர்.

சட்டபூர்வமாக மலேசியாவில் தங்குவதற்கு அனுமதியற்ற நிலையில், வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் ஆகிய அடிப்படை விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர். அகதிகளுக்கான ஐ.நாவின் சாசனத்தில் இந்தியாவைப்போன்று மலேசியாவும் கைச்சாத்திடாத நிலையில் அகதிகள் தொடர்பில் மலேசியாவின் நடவடிக்கைகளுக்கு ஐ.நாவால் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதுள்ளது என ஐ.நா பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே ஐ.நாவின் யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் உட்பட பல உள்ளூர்த் தொண்டு நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

# 1800 இளைஞர்,யுவதிகளுக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

தென் கொரிய வேலைவாய்ப்பிற்கென சுமார் 1800 இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொண்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 800 பேர் தென் கொரியாவிற்குச் சென்றுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு கொரிய மொழி உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதால் அது நிறைவடைந்த பின்னர் அவர்கள் தென் கொரியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இதுவரை 6000இற்கும் மேற்பட்டவர்கள் கொரியாவில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளதாக அந்தப் பணியகம் கூறியுள்ளது.

# தெற்கு லண்டனில் அமைந்துள்ள தமிழரின் கடைமீது துப்பாக்கிச் சூடு

## தந்தையும் மகளும் படுகாயம்

(கொழும்பு)

தெற்கு லண்டன் பகுதியில் தமிழர்களுக்குச் சொந்தமான பலசரக்குக் கடை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 5 வயதுச் சிறுமியும் 35 வயதுடைய கடைஉரிமையாளரும் காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த கடை உரிமையாளரும் சிறுமியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அவர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஐந்து பேரைக் கொண்ட குழுவினரே நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளதாக நேரில் கண்ட சாட்சியான கிருபாகரன் நந்தீஸ்வரன் என்பவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

கடை உரிமையாளர் மீது முதலில் போத்தலால் தாக்கி விட்டு வெளியில் இருந்த நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், இதில் 5 வயதுச் சிறுமியின் நெஞ்சில் துப்பாக்கிச் சூடுபட்டு கீழே விழுந்ததைத் தான் நேரில் கண்டதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடை உரிமையாளர் கடைக்கு மேலே உள்ள மாடி குடியிருப்பில் வசிப்பவர் என்றும், காயமடைந்த 5 வயதுச் சிறுமி தாயுடன் கடைக்கு வந்த போது இத்துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உள்ளதாகவும் லண்டன் குற்றத்தடுப்பு பிரதம பரிசோதகர் ரொனி பௌவ்டன் தெரிவித்தார்.

லண்டன் நகர குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அவுஸ்ரேலிய முகாமிலிருந்த இலங்கை அகதி தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் கேட்டின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மேற்கு அவுஸ்ரேலியாவில் உள்ள கேட்டின் தடுப்பு முகாமில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கேட்டின் தடுப்பு முகாமில் இருந்த ஆப்கானிஸ்தான் அகதி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இடம்பெற்ற 24 மணிநேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கையைச் சேர்ந்த இந்த அகதி தோட்டத்துக்குள் நடந்து சென்ற சற்று நேரத்தில் அங்குள்ள மரம் ஒன்றில் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு தொங்கினார்.

மரத்தில் தொங்கியபடி உயிருக்குப் போராடிய அவரை தடுப்பு முகாம் அதிகாரிகள் காப்பாற்றி மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.



தற்கொலை செய்து கொள்ள முயன்ற இலங்கையைச் சேர்ந்த இந்த அகதி சிறிய காயமடைந்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அவரது பெயர் விபரத்தை அவர்கள் வெளியிடவில்லை.

அவுஸ்ரேலியாவில் அடைக்கலம் கோரிய ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்மஸ் தீவு மற்றும் கேட்டின் தடுப்பு முகாம்களில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அங்குள்ள அகதிகள் மத்தியில் மனவிரக்தி அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நேற்று முன்தினம் அஸ்மோர் தீவுக்கு அருகே 37 அகதிகளுடன் வந்த படகு ஒன்றை அவுஸ்ரேலிய அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதில் இருந்த அகதிகள் அனைவரும் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்கள் எந்த நாட்டவர்கள் என்ற விபரத்தை அவுஸ்ரேலிய அதிகாரிகள் வெளியிடவில்லை.

# வருடாந்தம் 80 ஆயிரம் பேர் வீதி விபத்துகளில் சிக்குகின்றனர்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 80ஆயிரம் பேர் வீதிவிபத்துக்களில் சிக்குவதாகவும்,இவர்களில் 2ஆயிரத்து 500 பேர் உயிரிழப்பதாகவும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் அதிகரித்துச்செல்லும் வீதி விபத்துக்களினால் 20ஆயிரம்பேர் ஊனமுற்றவர்களாகின்றனர்.

எனவே இந்த வீதிவிபத்துக்களைத் தடுப்பதற்கும்,உயிரிழப்புகளைத் தடுப்பதற்கும் அரசாங்கம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இதன்படி,வீதி விபத்துக்களில் சிக்குபவர்களின் உயிர்களைக் காப்பாற்றும் வகையில்,விசேடவிபத்து விடுதிகள், மாவட்டம் தோறும் உள்ள வைத்திய சாலைகளில் அமைக்கப்படவுள்ளன. இந்த விபத்துவிடுதியின் முதல்பிரிவு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று திறக்கப்படவுள்ளது.

# அகதிகளைக் கப்பலில் அனுப்பிய இலங்கைத் தமிழருக்கு பிடியாணை

(கொழும்பு)


கனடாவுக்கு 76 தமிழ் அகதிகளை கப்பலில் அனுப்பி வைத்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரித்தானிய குடியுரிமை பெற்ற தமிழர் ஒருவரைக் கைது செய்வதற்கு அனைத்துலக காவல்துறை பிடியாணை பிறப்பித்துள்ளதாக கனடாவின் நசனல் போஸ்ட் ஊடகம் தெரிவித்துள்ளது.

சண்முகசுந்தரம் கந்தாஸ்கரன் (வயது40) என்பவரையே கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருப்பதாக அனைத்துலக காவல் துறையின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரே 2009ம் ஆண்டில் ஓசன் லேடி என்ற கப்பலில் 76 தமிழ் அகதிகளைக் கனடாவுக்கு அனுப்பி வைத்திருந்தார் என்றும் நசனல் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

சங்கர் என்று அழைக்கப்படும் இவர் இலங்கையில் பிறந்தவர்.

பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்துள்ள இவர், பிரித் தானியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் இருந்து செயற்பட்டவர்.



புலிகளின் கடற் புலிகள் பிரிவில் இணைந் திருந்த இவர் சண்டை ஒன்றில் கால் ஒன்றை இழந்த பின்னர் பிரித்தானியாவுக்குச் சென்றார்.

அங்கிருந்து இவர் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

'பிரின்சஸ் ஈஸ்வரி' என்ற கப்பலில் இவர் வடகொரியாவில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்தியதாகவும தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009 மே மாதம் இந்தக் கப்பல் இலங்கைக்கு ஆயுதங்களைய சமயம் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணமானதை இந்தக் கப்பலின் பணியாளர்கள் அறிந்தனர்.

இதையடுத்து கப்பலில் இருந்த ஆயுதங்களை அவர்கள் இந்தோனேசியாவுக்கு அப்பாலுள்ள கடலில் கொட்டி விட்டனர்.


அதன்பின்னர் கந்தாஸ்கரன் கனடாவுக்கு அகதிகளை ஏற்றி அனுப்பும் ஆட்கடத்தலில் ஈடுபடத் தொடங்கினார்.

கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட 'பிரின்சஸ் ஈஸ்வரி' என்ற கப்பலின் பெயரை 'ஓசன் லேடி' என்று மாற்றிய பின்னர் இந்தியாவில் இருந்து அது புறப்பட்டது.

மலேசியாவில் நிறுத்தப்பட்ட அந்தக் கப்பல் பின்னர் 76 அகதிகளுடன் பிரிட்டிஸ் கொலம்பியா கரையை வந்தடைந்தது.

அதன் பின்னர் 10 மாதங்கள் கழிந்து 492 அகதிகளுடன் 'சன் சீ' கப்பல் கனடாவுக்கு வந்தது' என்றும் நசனல் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# இளம் வீரர்களுக்குச் சிறந்த வழிகாட்டி



இளம் வீரர்களுக்கு டெண்டுல்கர் சிறந்த வழிகாட்டி என, டோனி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப்போட்டியில் இந்தியா 29 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இந்த வெற்றி குறித்து இந்திய அணி கப்டன் டோனி கூறுகையில்,

நெருக்கடியான நேரத்தில் சிறப்பாக விளையாடியது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. 260 ரன் என்பது இந்த ஆடுகளத்தில் நல்ல ஸ்கோர் தான். ஆனால மிகவும் கவனமுடன் விளையாடினோம். பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாகப் பந்து வீசினார்கள். இந்தியாவின் தொடக்கம் சிறப்பாக இருந்தது.

டெண்டுல்கரின் துடுப்பாட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு டெண்டுல்கர் மிகச் சிறந்த வழிகாட்டி.

ஒவ்வொரு வரும் அணியின் வெற்றிக்காகவே ஆடுகிறார்கள். வீரர்களின் கூட்டு முயற்சியால் தான் வெற்றி பெற்றோம். சச்சின் டெண்டுல்கரும், சேவாக்கும் நல்ல தொடக்கம் தந்தனர். ஆனால் போகப் போக ஆடுகளம் கடினமாகிவிட்டது. மிடில் பகுதியில் ரன்கள் எடுக்கச் சிரமமாக இருந்தது. அப்ரிடியின் பந்து வீச்சு உண்மையிலேயே அபாரமாக இருந்தது.

260 ரன்கள் என்பது இந்த ஆடுகளத்திற்கு நல்ல ஸ்கோர் தான்.' பந்து நன்கு சுழன்று திரும்பியது. ஆனால் நாங்கள் ஆடுகளத்தைத் தவறாக கணிதது விட்டோம். இதனால் தான் 3 வேகப்பந்து வீச்சாளர்களை சேர்த்தோம். அவர்களும் அபாரமாக ஆடினார்கள். ஆசிஷ் நெக்ரா குறித்து விமர்சிக்கப்பட்டது. இது கிரிக்கெட்டின் ஒரு பகுதி. ஆனால் அவர் சிறப்பாக பந்து வீசியதை அனைவரும் பார்த்து இருப்பார்கள். அடுத்து இறுதிப்போட்டியில் இலங்கையை சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்றார்.

# இலங்கையுடனான போட்டியிலும் சிறப்பாக விளையாடுவோம்



(மொகாலி)

இலங்கை அணியுடனான இறுதிப் போட்டியிலும் சிறப்பாக விளையாடுவோமென சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

ஆட்ட நாயகன் விருது பெற்ற டெண்டுல்கர் இது குறித்து நிருபர்களிடம் கூறியதாவது:-

ஒரு ஆட்டத்துக்கு 5 வாய்ப்பு என்பது எதிர்பார்க்காத ஒன்று. நான் முன்னதாக அவுட் ஆக கூடாது என்று கடவுளின் கருணை இருந்து இருக்கிறது. இறுதிப் போட்டி மும்பையில் நடப்பது மிகவும் பரபரப்பானது.

துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு ஆகிய 3 வகைகளிலும் நாங்கள் சிறப்பாக விளையாடுவோம் என்று நம்புகிறேன். சூழ்நிலைக்கு ஏற்றவாறு எப்படி விளையாட வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்.

உலகக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிரான 5 ஆட்டத்திலும் வெற்றி பெற்ற அணியில் நான் இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடக்கத்தில் நாங்கள் விளையாடுவதைப் பார்க்கும் போது 310-315 ரன் வரை வரும் என்று நினைத்தேன். பாகிஸ்தான் சுழற்பந்து வீரர்கள் சிறப்பாக வீசியதால் அந்த நிலை மாறியது. ரெய்னாவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இதனால் 265-270 என்று நல்ல ஸ்கோர் என்று நினைத்தேன். இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

# முரளிக்காக கிண்ணம்



(கொழும்பு)

இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனைக் கௌரவிக்கும், பாராட்டும் வகையில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

# பிடிகளைத் தவறவிட்டதே தோல்விக்கு காரணமாகும்


(மொகாலி)

இந்திய அணியுடனான அரையிறுதிப் போட்டியில் பிடிகளைத் தவறவிட்டதே தோல்விக்கு முக்கிய காரணமென பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

எங்களைவிட இந்திய அணி சிறப்பாக விளையாடியது. அவரகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


இறுதிப்போட்டியில் இந்திய அணி வெற்றி பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். எங்கள் அணியின் எந்த ஒரு ஜோடியும் நிலைத்து நின்று ஆடவில்லை.



விக்கெட்டுகள் விழுந்த வண்ணம் இருந்தது. வகாப் ரியாஸ் சிறப்பாகப் பந்து வீசினார்.

உமர்குல் பந்து வீச்சு சரியாக அமையவில்லை. எந்த ஒரு நபருக்கும் மோசமான நாள் அமையலாம். இந்தியாவுடன் மோதும் அரை இறுதி போட்டியைப் பாகிஸ்தானில் அனைவரும் எதிர்பார்த்தனர். இந்தத் தோல்விக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# "ஸ்ருவர்ட் புரோட்"டை நியமியுங்கள்



இங்கிலாந்தின் ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து அன்ரூஸ்ரோர்ஸ் விலகுவதாக இருந்தால் அந்த இடத்திற்கு ஸ்ருவர்ட் புரோட்டை நியமிக்க வேண்டுமென அந்த அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஸ்ருவரிட் புரோட்டை இங்கிலாந்தின் ஒருநாள் போட்டிக்கான அணியின் தலைவராக நியமித்தால் அந்த அணி மேலும வளர்ச்சியடையும். ஒருநாள் அணிக்கு வேறுபட்ட அணுகுமுறைகளும் வழிகாட்டுதல்களும் அவசியமானவை.

பங்களாதேஷிற்கான சுற்றுப் பயணத்திற்கு, இங்கிலாந்தின் டெஸ்ட் அணித் தலைவராக அலிஸ்ரர் குக் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் ஒருநாள் அணிக்கு ஸ்ருவர்ட் புரோட் தகுதியுடையவராக இருப்பார்.

எனது அணித் தலைமையின் கீழ் ஸ்ருவர்ட் புரோட் விளையாடும்போது மிகவும் ஆர்வமாகவும் சுறுசுறுப்பு மிக்கவராகவும் விளங்கினார்.

எனவே புரோட்டை ஒரு நாள் அணியின் தலைவராக நியமித்தால் இங்கிலாந்து அணி வளர்ச்சியடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.




# முரளி, மத்தியூஸ் காயம்





(கொழும்பு)

இந்திய அணியுடனான இறுதிப் போட்டியில் விளையாடும் இலங்கை அணியில் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், சகல துறை வீரர் மத்தியூஸ் இருவரும் காயமடைந்துள்ளனர்.

எனவே இவர்களுக்குப் பதிலாக வேகப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ், சுழற் பந்துவீச்சாளர் சுராஜ் ரன் டீங் இருவரும் வாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் மும்பைக்கு செல்லவுள்ளதாக இலங்கை அணியின் ஊடக முகாமையாளர் பிரைன் தோமஸ் தெரிவித்தார்.

# மோசமான களத்தடுப்பு - தோல்வி



(மொகாலி)

பாகிஸ்தான் வீரர்களின் மோசமான களத்தடுப்புக் காரணமாகவே இந்திய அணியுடனான அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் தோற்றதென அந்த அணியின் முன்னாள தலைவர் இம்ரான்கான் தெரிவித்தார்.

இதுகுறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் கூறுகையில்,

பாகிஸ்தானின் மோசமான களத்தடுப்பே இந்தத தோல்விக்குக் காரணம்.

டெண்டுல்கரின் விக்கெட்டை 4 முறை தவறவிட்டது பாகிஸ்தானின் மோசமான தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்றார்.

# உதைபந்தாட்ட இறுதி ஆட்டங்களில் முத்துத்தம்பி, சென். பற்றிக்ஸ் வெற்றி




16 வயது 1 ம். இடம் முத்துத்தம்பி ம.வி

-18 வயது 1ம் இடம் புனித பத்திரிசியார் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலைகளின் 16 மற்றும் 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயமும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வெற்றிபெற்றன.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் முத்துதம்பி மகா வித்தியாலயம் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இதேவேளை 18 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அணியும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மோதிக்கொண்டன. போட்டி நேரம் முடியும் வரை இரு அணிகளும் கோல் போடாததால் தண்ட உதை வாய்பு வழங்கப்பட்டது. இதனைச் சரியாகப் பயன்படுத்திய புனித பத்திரிசியார் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (20)

# மியன்மாரில் நிலவிய இராணுவ ஆட்சி நேற்று முன்தினம் முடிவிற்கு வந்தது

(யாங்கூன்)

மியன்மாரில் கடந்த 20 ஆண்டுகளாக நிலவி வந்த ராணுவ ஆட்சி நேற்றுமுன் தினம் முடிவுக்கு வந்தது. இதை யடுத்து, புதிய அதிபர் தலை மையிலான அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டது.

மியன்மாரில் தான்வே தலைமையிலான ராணுவ ஆட்சி கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வந்தது. கடந்தாண்டு நவம் பரில் பொதுத் தேர்தல் நடத் தப்பட்டது. இதில், ராணுவத் தின் ஆதரவு பெற்ற ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சி வெற்றி பெற்றது.

அதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் ராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. புதிய அதிபராக தெய்ன் செய்ன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருடன் இரண்டு துணை அதிபர்கள், 58 அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சரவையும் நேற்றுமுன்தினம் பொறுப் பேற்றுக் கொண்டது. ராணுவ ஆட்சித் தலைவரான தான் வே, எதிர்காலத்தில் என்னென்ன பொறுப்புகள் வகிப்பார் அல்லது ஆட்சிக்கு ஆலோசகராக இருப்பாரா `எனப் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தற்போது அவர் ராணுவத் தலைவர் பதவியில் இருந்து இறக்கப்பட்டுள்ளார். அவரது பதவிக்கு ஜெனரல் மின் அவுங் ஹைங் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் புதிய அரசு பொறுப் பேற்றதன் மூலம் மியன்மாரில் ஜனநாயகம் மலரும் என்று நிபுணர்கள் சிலர் கருதுகின்ற னர். ஆனால் அமைச்சர்களில் பலர், ராணுவத்தின் முன்னாள் ஜெனரல்கள் என்பதால், இது வும் ராணுவ ஆட்சியின் நீட்சி யாகவே இருக்கும் என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கடாபிக்கு அரசியல் தஞ்சம் உகண்டா அரசு அறிவிப்பு



(கம்பாலா)

மக்களின் கிளர்ச்சியாலும், அமெரிக்கக் கூட்டு படைகளின் தாக் குதலாலும் அதிர்ந்து போயிருக்கும் லிபிய அதிபர் கடாபி வேண்டும் என்றால் எங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்து கொள்ளலாம் என அழைப்பு விடுத்துள்ளது உகண்டா அரசு.

உகண்டா அரசின் செய்தித் பத்திரி கையாளர்களுக்குத் தெரிவித்தார்.

ஆபத்தில் இருக்கும் யார் தஞ்சம் கேட்டாலும், அடைக்கலம் அளிக்க வேண்டும் என்பது தங்கள் நாட்டின் கொள்கை என்றும் எனவே அதிபர் கடாபி விரும்பினால் உகண்டாவில் தங்கிக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

# நாஸா அனுப்பிய விண்கலம் புதன் கிரகத்தை படம் பிடித்தது



புதன் கிரகத்தை ஆய்வு செய்ய அமெ ரிக்காவின் நாசா விண்வெளிமையம் 'மெசஞ்சர்' என்ற விண் கலத்தை கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பியது. சூரிய குடும்பத்தில் மிகத் தொலைவில் உள்ள இந்தக் கிர கத்தை கடந்த 17 ஆம் திகதி இந்த விண்கலம் சென்றடைந்தது. தற்போது இந்த விண்கலம் புதன் கிரகம் அருகே நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அது தனது ஆய்வுப் பணியைத் தொடங்கி யுள்ளது. இந்த நிலையில் மெசஞ்சர் விண்கலம் புதன் கிரகத் தின் மேறபரப்பை முதன் முறையாக புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது. இதன் மேற்பகுதி மற்றக் கிரகங்களைப் போல் அல்லாமல் வழக்கத்துக்கு மாறாகவுள்ளது.

அதில் இருள் மயமான கதிர்வீச்சுக் காணப்படுகிறது. அது 'டெபுசி' என்று அழைக்கப்படுகிறது. அவற்றின் கீழ் பகுதியும் இதற்கு முன்பு பார்க்காத அளவில் வித்தியாசமாக உள்ளது. இந்தத் தகவலை நாசா விண்வெளி மையம் தெரிவித்துள்ளது.

இந்த படம் உட்பட மொத்தம் 363 புகைப்படங்களை எடுத்து 'மெசஞ்சர்' விண்கலம் அனுப்பியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்த பிறகு படிப்படியாக அவை வெளியிடப்பட உள்ளது என்றும் கூறப்பட்டது

# கிளர்ச்சியாளர்கள் பிடித்த மூன்று நகரங்களை கடாபி ஆதரவுப் படைகள் மீளக் கைப்பற்றின

(அஜிதாபியா)


லிபியாவில் கடாபிக்கு ஆதரவான இரா ணுவத்தினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கு மிடையே இடம்பெற்று வரும் மோதலில் கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றிய மூன்று நகரங்களை கடாபி ஆதரவு இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

தொடக்கத்தில் புரட்சியாளர்களிடம் இருந்த ரஸ்லனூப், பிரகா, அஜ்தாபியா உள்ளிட்ட நகரங்களை ராணுவம் மீண்டும் கைப்பற்றி தங்கள் வசமாக்கியது. பெங்காசியை மட்டும் அவர்களால் நெருங்க முடியவில்லை. இந்த நிலையில் புரட்சியாளர்களுக்கு ஆதரவாக அமெ ரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ராணு வத்துக்கு எதிராக குண்டு வீச்சு நடத்தியது.

இதைத் தொடர்ந்து ராணுவத்தின் வசம் இருந்த பிரகா, ரஸ்லனூப், அஜ்தாபியா நகரங் கள் மீண்டும் புரட்சியாளர்கள் வசமானது. இவை தவிர அதிபர் கடாபி பிறந்து வளர்ந்த அவரது சொந்த ஊரான சிர்தேவும் புரட்சியாளர்களின் அதிகாரத்துக்கு வந்தது.

கடந்த 5 நாட்களாகத் தொடர்ந்து நடத்திய அதிரடி குண்டு வீச்சில் ராணுவத்தின் டாங்கிகள் மற்றும் ராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ராணுவம் 300 கி.மீட்டர் தூரத்துக்குபின் வாங்கியது.

மேலும் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்த அஜ்தா பியாவை பாதுகாப்பதில் கவனம் செலுத்தி வந்தனர். ராணுவ டாங்கிகள் கனரக



துப்பாக்கிகளுடன் சுற்றி வளைத்து காத்து வந்தனர். இதைப் பயன்படுத்தி கொண்ட ராணு வத்தினரும், கடாபியின் ஆதரவாளர்களும் 2 நாட்களாக மெதுவாக முன்னேறிச் சென்றனர்.

ரஸ்லனூப், நாவ்பாலியா, பின்ஜாவாத் ஆகிய 3 நகரங்கள் மீது சரமாரியாகக் குண்டு மழை பொழிந்தனர். அதைத் தாக்குப் பிடிக்க முடியாத புரட்சி யாளர்கள் அந்த நகரங்களில் இருந்து வெளியேறினர். இதைத் தொடர்ந்து அந்த 3 நகரங்களும் தற்போது மீண்டும் ராணுவ வசமாகி உள்ளது.

பிரகா நகரத்தையும் பிடிக்க ராணுவம் முன் னேறி வருகிறது. இந்த தகவலை புரட்சியாளர் கள் தெரிவித்துள்ளனர்.

## வெள்ளி விருந்து

# திருமுறையின் அருமையும் பெருமையும்

சைவ நாயன்மார்களால் அருளிச் செய்யப்பெற்ற தேவாரத் திருப்பதி கங்கள் சைவ மக்களுக்குக் கிடைத் துள்ள ஓர் அரிய பொக்கிஷமாகும். இவற்றை நாம் பக்தியோடு பிழையின்றிப் பண்ணோடு முறையாக ஓதவேண்டும். இறைவனின் அருட்பிரவாகத்தின் அருமை பெருமையையும், அற்புத லீலைகளின் தத்துவார்த்தமான பொருள் விளக்கங்களையும் நோக்குமிடத்து இந்தத் தேவாரத் திருப்பதிகங்கள் வரலாற்றுச் சான்றாதாரங்களாக விளங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வளர்ந்து வரும் இன்றைய மாணவ பரம்பரையினர், அற்புதங்கள் புரிந்த இத்தேவாரங்களின் மதிப்பை உணராது புறக்கணித்து வருவது மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. ஆகவே, பாடசாலையில் கல்வி பயிலும் மாணாக்கர் மத்தியில் ஆன்மீக உணர்வை ஏற்படுத்தி, தேவாரங்களின் உயர்நிலையை உணரச் செய்து நன்னெறிப்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடனாகும்.

மாணவ சமுதாயம் தேவாரங்களை விரும்பி ஓதப்புகும் பழக்கத்துக்கு வர நம்மாலான முழு முயற்சியையும் எடுக்க வேண்டும். பொதுவாக எல்லா ஆலயங்களிலும் செவ் வாய்க்கிழமைகளிலோ அல்லது வெள்ளிக்கிழமைகளிலோ பஜனை, கூட்டுப்பிரார்த்தனை செய்யும் முறையைப் பழக்கப் படுத்த வேண்டும்.

மாணவர்கள் இதனைத் தாமாகவே விரும்பி ஓதப்புகும் வகையில் சைவத்திருமுறைகளில் ஓர் ஈர்ப்புச் சக்தி இருப்பதாகக் கூறி, அதை நல்லமுறையில் ஓதப்புகுந்தால் செல்வம் பெருகி, வீடுகளில் சுபிட்சமும் மகிழ்ச்சியும் தாண்டவமாடும் என அறிவுறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால்தான் கடவுள் நம்பிக்கை தலையெடுக்கும். மாணவ சமூகம் ஓர் உருப்படி யானதாகவும் அமைந்து வரும் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. ஆகவே, தேவாரப் பாடல்களை மனதுக்கு இதமான முறையில் பாடி, நல்லதொரு பணியை ஆற்றியவர்களாவோம்.

சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# ஈராக்கில் நடந்த தற்கொலைத் தாக்குதல் 41 பேர் உடல் சிதறிப் பலி, 95 பேர் படுகாயம்



(திக்ரித்)

ஈராக்கில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 41 பேர் உடல்சிதறிப் பலியானது டன், மேலும் 95 பேர் படுகாய மடைந்தனர்.

ஈராக்கில் பாக்தாத்துக்கு அடுத்தபடியாக பெரிய நகராக திக்ரித் திகழ்கிறது. நேற்று காலை அங்குள்ள ஒரு அரசு அலுவலகத்திற்குள் துப்பாக்கி கள் ஏந்திய தற்கொலைத் தீவிரவாதிகள் புகுந்தனர். அவர்கள் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ராணு வத்தினர் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

தகவல் அறிந்ததும் அப் பகுதிக்குப் பொலிஸார் விரைந்து சென்றனர். அதற்குள் அரசு அலுவலகத்துக்குள் புகுந்த தற்கொலைத் தீவிரவாதி வருகன் கான் உடலில் கட்டி யிருந்த வெடிகுண்டை வெடிக் கச் செய்தான்.


இதனால் அந்த கட்டிடம் இடிந்தது.

அதேவேளையில், அங்கு வந்த பொலிஸாரின் வாகனத்தில் குண்டு வெடித்தது. இதனால் அங்கு பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் 41 பேர் அதேயிடத்தில் உடல் சிதறி உயிரிழந்தனர். 95 பேர் படுகாயம் அடைந்தனர். அவர் கள் அனைவரும் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

பொலிஸார் வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் உயர் பொலீஸ் அதிகாரி இமாத் நொயின் உள்பட 8 போலீசார் பலியாகி னர். பலர் காயம் அடைந்தனர். தற்கொலைத் தாக்குதலை தொடர்ந்து திக்ரித் நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் அல் கொய்தா தீவிரவாதிகள் ஈடுபட் டதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# தமிழக சட்டசபைத் தேர்தலில் 2773வேட்பாளர்கள் போட்டி




(சென்னை)

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுத் தாக்கல் மார்ச் 19ஆம் திகதி தொடங்கியது. மார்ச் 26ஆம் திகதி மனுத் தாக்கல் முடிந்தது.

தமிழகம் முழுவதும் 4 ஆயிரத்து 228 பேர் மனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களது மனுக்கள் அனைத்தையும் பரிசீலிக்கும் பணி கடந்த திங்கட்கிழமை நடந்தது.

தேர்தலில் போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் விவரம் குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வெளியிட்ட செய்தியில்,

பேரவைத் தேர்தல் களத்தில் 2,773 வேட்பாளர்கள் உள்ளனர். 313 வேட்புமனுக்கள் வாபஸ் பெறப்பட்டன.

அதிகபட்சமாக, சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் 31 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக நாகப்பட்டினம் தொகுதியில் நான்கு வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

திருப்பூர் வடக்குத் தொகுதியில் மொத்தமாக 151 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், 81 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 60 பேர் தங்களது வேட்புமனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டனர். அந்தத் தொகுதியில் 10 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.


மனுக்கள் வாபஸ் பெறப்பட்டு, வேட்பாளர்களின் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் தி.மு.க., அ.தி.மு.க. அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு மெழுகுவர்த்தி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

41தொகுதிகளில் போட்டியிடும் தே.மு.தி.க.வுக்கு முரசு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.




# விழிப்புணர்வு பிரசாரத்தூதுவர் கங்குலி எதிர்ப்பு தெரிவிக்கிறது திரிணமூல்



(சென்னை)

மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தலில் விழிப்புணர்வு பிரசார தூதராக கங்குலியை நியமித்ததற்கு திரிணமூல் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதுகுறித்த விபரம் வருமாறு: சட்டசபைமற்றும் லோக்சபா தேர்தல்களில் வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பிரபலங்கள் மூலம் விழிப்புணர்வுப் பிரசாரம் செய்துவருகிறது தேர்தல் திணைக்களம். அதன் அடிப்படையில் மேற்கு வங்கத்தின் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சவுரவ் கங்குலியைக் கொண்டு விழிப்புணர்வு பிரசார படம் தயாரித்தது. கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் கங்குலிக்கு தொடர்பு இருப்பதால் விழிப்புணர்வு பிரசார படம் ஒரு சார்பு பட்சமாக கருத வாய்ப்புள்ளது என திரிணமூல் காங்கிரஸ் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து மேலதித தேர்தல் ஆணையர் சகானா விசாரணை நடத்த உத்தர விட்டுள்ளார்.

# இந்திய மக்கள் தொகை வளர்ச்சி கணிசமான அளவு குறைந்துள்ளது





(சென்னை)

இந்திய மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் கணிசமான அளவு குறைந்துள்ளது. அதே நேரத்தில் மக்கள் தொகை 18 கோடி அதிகரித்துள்ளது. இத்துடன் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றம் மிக, மிகக் குறைந்து விட்டதாகவும், இதுவரை இந்தியா சுதந்திரம் அடைந்த காலம் முதல் நடப்பு கணக்கெடுப்பில் தான் குறைந்த அளவு இந்த குற்றம் நடந்திருப்பதாகவும் புள்ளிவிபர கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு தகவல் நேற்று வெளியிடப்பட்டது. உள்துறை செயலர், மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவாளர் இந்த விவர அறிக்கையை வெளியிட்டனர். இந்தக் கணக்கெடுப்பின் படி இந்திய நாட்டின் மொத்த மக்கள் தொகை - 1.21 பில்லியன்.(121 கோடி ) . இந்திய மக்கள் தொகை 181 மில்லியன் (18கோடியே பத்து லட்சம்) அதிகரித்துள்ளது, ஆண்களின் எண்ணிக்கை : 62.3 கோடி' பெண்களின் எண்ணிக்கை : 58.6 கோடி எனத் தெரிவிக்கப்பட்டது.

# மக்களிடம் வாக்குக் கேட்பதற்காக உத்தமிவேடம் போடும் ஜெயலலிதா

## என்கிறார் கருணாநிதி



(சென்னை)

கடந்த கால அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்க வில்லை. இதனால் இன்றைக்கு கஷ்டப்படுகிறோம். இன்னும் ஒரிரு ஆண்டுகளில் நம்முடைய மின் தேவை முழுவதும் அயல் மாநிலத்துக்கு வழங்கும் அளவுக்கு, தமிழ்நாட்டில் உற்பத்தி அதிகரிக்கும். இந்த உறுதியை நம்பலாம் என தமிழக முதல் அமைச்சரும், தி.மு.க தலைவருமான கலைஞர் கருணாநிதி தனது 2ஆவது கட்ட பிரசாரத்தின்போது தெரிவித்தார். கோவையில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,


கடந்த காலத்தில் ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியில் சாதாரண மக்கள் வாழ முடிய வில்லை. அரசு ஊழியர்கள் சிறையில் இருந்தார்கள். ஆசிரிய பெருமக்கள் அடி பட்டார்கள், உதைபட்டார்கள்.

எதிர்க் கட்சித் தலைவரான என்னையும் சிறையில் பூட்டி அடித்து உதைத்தார்கள். இது தான் அம்மையார் ஆட்சியின் சிறப்பம்சம். தமிழ்நாட்டில் அம்மையார் ஆட்சியில் நடைபெற்ற அநியாயம், அக்கிரமங்களை எண்ணிப்பாருங்கள். இன்றைக்கு பாட்டாளியைப் பற்றிப் பேசும் ஜெயலலிதா அன்று என்ன சொன்னார்? அரசு அதிகாரிகளைச் சவுக்கடி கொடுத்து அடக்கி வைப்பேன் என்று சட்டமன்றத்தில் பேசினார்.

இன்றைக்கு வாக்குகள் கேட்க உத்தமிவேடம் போடுகிறார். அவர் அடிக்காத கொள்ளையா? ஆடாத ஆட்டமா? பெங்களூரில் அவர் மீது நடக்கும் வழக்கு எதற்காக நடக்கிறது? அதற்கு கெடு வாங்கி வருகிறார். இந்தத் தேர்தலுக்கு முன்பு தீர்ப்புச் சொன்னால், அளவுக்கு மீறி சொத்து சேர்த்துள்ளார். அதனால் அதற்குரிய தண்டனை கிடைக்கும். தண்டனை கிடைத்தால் தேர்தலில் நிற்க முடியாது என்று அந்த வழக்குக்கு புள்ளி சரியில்லை, கமா சரியாக இல்லை என்று ஒத்தி வாங்குகிறார்கள். தற்போது ஒத்திவைக்கப்படலாம்? அதற்குத் தண்டனை கிடைக்காவிட்டால் உச்ச நீதிமன்றம் இருக்கிறது எனத்தெரிவித்தார்.

# எதிர்வரும் ஆறுமாத காலப்பகுதியில் நாடாளுமன்றுக்குத் தேர்தல்

## ஊகம் தெரிவிக்கிறார் வெங்கையா நாயுடு



(சென்னை)

இன்னும் 6 மாதத்துக்குள் நாடாளுமன்றத்துக்கு இடைத் தேர்தல் வரும் என்று அசாமில் தேர்தல் பிரசாரம் செய்த பா.ஜனதா மூத்த தலைவர் வெங்கையா நாயுடு, தெரிவித்தார்.

சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு அசாம் மாநிலத்தில் உள்ள தேஜ்புர், மரியானி ஆகிய இடங்களில் நடந்த பொதுக் கூட்டங்களில் பேசிய அவர்,

மத்தியில் தற்போது நடைபெற்று வரும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் எண்ண முடியாத அளவுக்கு ஊழல்கள் நடைபெற்று வருகின்றன. ஊழல் பிரச்சினையில் மத்திய அரசு சிக்கி தவிக்கிறது. ஊழல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் விரைவில் தேர்தல் நடைபெறும். இன்னும் 6 மாதத்துக்குள் தேர்தலை எதிர்கொள்வது தவிர்க்க முடியாது.

வாஜ்பாய் பிரதமராக இருந்த ஆட்சிக் காலத்தில் தான், நாட்டில் அனைத்து வழிகளிலும் வளர்ச்சி காணப் பட்டது. அசாமில் சாலை போக்குவரத்து வளர்ச்சி மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிசாலைகளாக மாற்றியது போன்ற பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி செயல்படுத்தியது.

அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியைக் காண்பதற்கு பா.ஜனதாவை அசாம் மக்கள் ஆதரிக்க வேண்டும். தற்போதையை அரசு நீக்கப்படுவதைத் தவிர வேறு வழியே இல்லை என நாங்கள் கருதுகிறோம். பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இது போன்று நடந்து மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# இலவசங்களால் தமிழக மக்களை ஈர்க்கமுடியாது என்கிறார் சுஷ்மா



(சென்னை)

இலவசங்களால் தமிழக மக்களை ஈர்க்க முடியாததென பாரதிய ஜனதாக் கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் பாரதீய ஜனதாவுக்குச் சாதகமான சூழ்நிலை உள்ளது. மக்களிடம் ஆட்சிக்கு எதிரான மனப் போக்கு இருப்பதாகக் கருதுகிறேன். நாடாளுமன்றத்தில் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக இருந்து விலைவாசி உயர்வு, ஊழல், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசி இருக்கிறோம். இதனால் மக்கள் மத்தியில் நல்ல எண்ணம் உள்ளது.

மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கம் தி.மு.க.வின் மூத்த அமைச்சர் சிறையில் இருக்கிறார். அவர் மீது 80 ஆயிரம் பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய் யப்பட்டுள்ளது. எனவே மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். நாங்களும் இந்தத் தேர்தல் மூலம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெறாவிட்டாலும் எங்கள் கணக்கைத் தொடங்குவோம். தி.மு.க. ஒரு காலத்தில் எங்கள் கூட்டணியில் இடம் பெற்று இருந்தது. கடைசி வரை ஆட்சியில் பங்கு பெற்று விட்டு சந்தர்ப்பவாதத்தால் பிரிந்து சென்றார்கள். கொள்கை ரீதியாக விலகிப் போகவில்லை. அதே போல் தான் அ.தி.மு.க.வும். இரு கட்சிகளையும் சம தூரத்தில் வைத்துத் தான் நாங்கள் பார்க்கிறோம்.

இவ்வாறு சுஷ்மா சுவராஜ் கூறினார்.

# ஜி.எஸ்.பி வரிச்சலுகை இடைநிறுத்தத்தின் மூலம் இலங்கை மீதான பிடியை இழந்த ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கையினது மனித உரிமை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி பிளஸ் என்ற ஏற்றுமதி வரிச் சலுகையினை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தி ஏழு மாதங்கள் கடந்து விட்டன.

இந்த நிலையில் வரிச்சலுகை இடைநிறுத்தமானது, இலங்கையினது ஆடை உற்பத்தித் தொகையில் எதிர் பார்த்த தாக்கத்தினை ஏற்படுத்திவிட வில்லை என இலங்கை அரச அதி காரிகள் கூறுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த வரிச் சலுகை இடைநிறுத்தமானது, தாங்கள் வேலையிழப்பதற்கு வழிசெய்துவிடுமோ என 150 டொலர் மாதாந்த ஊதியத்திற் காக நாளொன்றுக்கு 12 மணிநேரங் களும் வாரமொன்றுக்கு ஆறு நாட்களும் இலங்கையினது ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 250,000 தொழிலாளர்கள் அஞ்சினார்கள்.

ஆனால் இன்றும் நாங்கள் எங்களது பணிகளில் எதுவிதப் பிரச்சினையு மின்றித் தொடர்கிறோம் என கொழும் பைச் சேர்ந்த 29 வயதான நாளந்தி பெரேரா என்ற ஆடை உற்பத்தித் தொழிற்சாலைப் பணியாளர் கூறுகிறார். நாங்கள் வேலையினை இழப்பதானது அது எங்களது வாழ்க்கையினையே சீரழித்துவிடும் என்கிறார் அவர்.

இலங்கையினது மத்திய வங்கி தரும் புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் என்ற 10 சதவீத வரிச்சலுகை யினைச் இலங்கை ஐந்து ஆண்டு களுக்கும் மேலாகப் பெற்றிருந்தது. இலங்கையினது மொத்த வெளிநாட்டு ஏற்றுமதியில் 65 சதவீதமானவை ஆடை உற்பத்திகளே என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

மூன்று அனைத்துலக சாசனங்களை இலங்கை அரசாங்கம் மதித்துச் செயற்படத் தவறியமையினால்தான் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான இந்த வரிச்சலுகையினை மீளப் பெற்றிருந்தது என கொழும்பினைத் தளமாகக் கொண்டு செயற்படும் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா கூறுகிறார். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர் பான அனைத்துலக சாசனம், சித்திர வதைகளுக்கு எதிரான சாசனம் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாச னம் என்பனவையே அவை என்கிறார் அவர்.



இலங்கையில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களை நேரடியாக அறியுமிடத்து இலங்கைக்குத் தனது விசாரணை அணியொன்றை அனுப்பு வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விரும் பியது. ஆனால் இதுபோன்றதொரு குழுவினை அனுமதிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மறுத்தமைதான் இந்த வரிச்சலுகை இடைநிறுத்தம் வேகமாக ஏற்படுத்தப்படுவதற்கு வழிசெய்தது என்கிறார் பெரேரா.

ஆனால் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசாரணை அணியினை அனுமதிப்பதானது போர்க் குற்றங்கள் தொடர்பான அனைத்துலக விசாரணை யினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அழுத்தம் அதிகரிப்பதற்கு வழி செய்துவிடும் என அரசாங்கம் அப் போது கருதியிருக்கக்கூடும் என்கிறார் அவர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்குவந்த புலிகளுடனான போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் அமைத்திருக்கும் வல்லுநர்கள் குழு, இலங்கைக்குச் சென்று விசாரணை களை மேற்கொள் வதற்கு இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

இலங்கை மனித உரிமைகளை மதித்துச் செயற்படும் நிலையினை ஏற் படுத்துவதற்காக அதன் மீதான அழுத் தங்கள் படிப்படியானதாக இருக்கவேண் டும் எனத் தாம் வாதாடியதாகவும் எடுத்த எடுப்பிலேயே ஜி.எஸ்.பி பிளஸ் என்ற இந்த வரிச்சலுகையினை இடை நிறுத்தவேண்டாம் எனக் கோரியதாகவும் தேசிய சமாதானப் பேரவை கூறுகிறது.

ஜி.எஸ்.பி பிளஸ் என்ற இந்த வரிச் சலுகையானது எடுத்த எடுப்பிலேயே மீளப்பெற்றிருக்கப்படக்கூடாது. மாறாக இலங்கை மனித உரிமைகளைத் தொடர்ந்தும் மதித்துச் செயற்படுவதற்கு வழிசெய்யும் வகையிலான ஒரு பிடி யினைத் தொடர்ந்தும் வைத்திருந் திருக்கலாம். இன்று இலங்கை மீதிருந்த தனது பிடியினை ஐரோப்பிய ஒன்றியம் இழந்துவிட்டது, அவ்வளவு தான் என்கிறார் ஜெகான் பெரேரா.

"உண்மையில் தண்டனையினை வழங்குவதைவிட.... தண்டனை வழங்கப் போகிறேன் எனக் கூறிக்கொண்டிருப்பது அதிக பலனைத் தரும்" என சமாதானப் பேரவையின் தலைவர் தொடர்ந்து கூறுகிறார்.

ஐரோப்பிய ஒன்றியமானது தனது வரிச்சலுகையினை இடைநிறுத்தியமை யானது இலங்கையினது பொருளா தாரத்தில் காத்திரமான எந்தத் தாக்கத் தினையும் ஏற்படுத்திவிடவில்லை என அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறுகிறார்.

மத்திய வங்கி வெளியிட்டிருக்கும் புள்ளி விபரத்தின் அடிப்படையில் 2009 தொடக்கம் 2010 வரையிலான கால பகுதியில் இலங்கையினது ஆடை ஏற்றுமதி 6.5 சதவீதத்தினால் அதிகரித் திருக்கிறது.

இலங்கையிலிருந்து கிடைக்கும் தைத்த ஆடைகளின் தரம் உயர்வாக இருப்பதனாலும், வாக்குறுதியளிக்கப் பட்ட திகதியில் அவை விநியோகிக்கப் படுவதாலும் வெளிநாட்டுக் கொள்வன வாளர்கள் இலங்கையினது தைத்த ஆடைகளில் அதிக நாட்டம் கொள் கிறார்கள் என கொழும்பினைத் தள மாகக் கொண்ட பொருளியலாளர் சாமர ஹெற்றியாராச்சி கூறுகிறார். இலங்கையி னது ஆடை உற்பத்தித் தொழில்துறை யானது, தற்போதுள்ள நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தரமான ஆடைகளை உற்பத்தி செய்கிறது என்கிறார் அவர்.

## மன்னாரில் அமுல்படுத்த முடியாத நிலையில் பெண்களுக்கான முறைசாரா கல்வித்திட்டம்



(மன்னார்)

மன்னார் முத்தமிழ் நகர் பகுதியில் உள்ள பெண்களுக்கான முறைசாராக் கல்வித் திட்டத்தினை அமுல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மன்னார் கல்வி வலயத்தின் ஆதரவுடன் முன்னெடுக் கப்பட்டு வரும் முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் மேற்படி பிரதேசத்தில் பன்னவேலைப் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

முத்தமிழ் நகர் பகுதியில் மக்களின் பொதுப் பாவனையைக் கருத்தில் கொண்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று சனசமூக நிலையம் ஒன்றினை அமைத்துக்கொடுத்திருக்கின்றது. மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 25இற்கும் மேற்பட்ட பெண்கள் முறை சாராக்கல்வித்திட்டத்திற்கு உள் வாங்கப் பட்டு அவர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் பிரதேசத்தின் பொதுத் தேவைக்கென அமைத்துக்கொடுக் கப்பட்டிருக்கும் பொதுக்கட்டடம் பெண் களுக்கான பயிற்சி நெறிக்கென திறந்து விடப்படாமல் தனியார் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கபட்டிருப்ப தாக மன்னார் பிரதேச செயலக அதி காரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இதனை அடுத்து குறித்த பகுதிக்கு விஜயம் செய்த செயலக அதிகாரிகள் பயிற்சி நெறியில் பங்கு பற்றும் பெண் கள் கட்டடத்தின் வெளிப் பகுதியில் வெறும் நிலத்தில் இருந்து கற்கை நெறியினைத் தொடர்வதை அவதானித் திருக்கின்றனர்.

பொதுக்கட்டடத்தை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் நபருக்கு பல தடவைகள் அதனைப் பயிற்சி நெறியா ளர்களின் பாவனைக்குத் திறந்து விடு மாறு பல தடவைகள் அறிவுறுத்தியிருக் கின்றபோதும், அது இதுவரையில் சாத்தி யப்படவில்லை என பயிலுநர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு சுமார் பத்துத் தினங்கள் ஆகியும் குறித்த பொதுக்கட்டடம் திறக்கப்படாத நிலை யில் அது தொடர்பில் மன்னாரில் இயங் கும் பெண்கள் அமைப்பிடமும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருக்கும் பெண் கள் சிறுவர் பிரிவிலும் முறைப்பாடு செய்ய இருப்பதாகவும் பயிலுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## பலமுள்ள அரசாங்கம் அதிகாரத்தில் உள்ளதால் மே தினத்தை சிறப்பாக கொண்டாடத் தீர்மானம்

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமிய மட்டத்திலிருந்து அபி விருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத் துவதற்கான மக்களாணை உள்ளூ ராட்சித் தேர்தலில் அளிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளரும், சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, பலமுள்ள அரசு அதிகாரத்திலிருப்ப தால் இவ்வருட தேசிய மே தின வைப வத்தை விரிவான அடிப்படையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்ப தாகவும் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட செய்தியாளர் மாநாட் டிலேயே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரி வித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இன்று நாட்டில் பலமுள்ள அரசாங்கம் காணப்படுகின்றது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் விடக்கூடுதலான பலம் அரசுக்குக் கிடைத்திருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் எதிர்வரும் தேசிய மே தினத்தை பிரமாண்டமான முறையில்




கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றோம். மிகப் பெரியதொரு தொழிலாளர் பேரணியை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணி களை ஆளும் கட்சிகளின் தொழிற் சங்கக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்திருக்கும் நாம், அந்த நம்பிக்கை வீண்போகாத வகையில் நடந்து கொள்ள வேண்டும். அந்தப் பாரிய பொறுப்பு உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# பனைசார் உற்பத்தி முயற்சிக்கு நவீன தொழில்நுட்பம் பனை ஏறும் இயந்திரம் விரைவில் அறிமுகம்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தகவல்



(யாழ்ப்பாணம்)

எமது பனைமரம் 100 வருடத்திற்கு வாழ்ந்து பயனைத் தருகிறது. ஒரு பனைமரம் 20 வருடத்திலிருந்து 100 வருடங்களுக்கு வருட வருமானம் 5000 ரூபா முதல் 6000 ரூபா வரையான வருமானத்தை எமக்கு வழங்குகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 11 மில்லியன் பனை மரங்கள் காணப்படுகின்றன. 5 லட்சம் பனை மரங்களின் பயனை நாம் பெறுவோமாயின் 500 கோடி ரூபா வருமானம் எமக்குக் கிடைக்கும் என பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் புத்தளம் மாவட்ட மீள்எழுச்சித் திட்டப் பணியாளர்களும், உற்பத்தியாளர்களும் பங்குபற்றிய கலந்துரையாடலில் உரைநிகழ்த்திய சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

1972 இல் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பனை அபிவிருத்திச் சபை 1978 இல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயினும் பனை அபிவிருத்திச் சபை தனது இலக்கை நோக்கி நகரவில்லை. எமது நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் 7 மாவட்டங்களில் மட்டுமே கற்பகம் விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

தென்னிலங்கை மக்கள் பனை சார் உற்பத்திப் பொருட்களை பெரிதும் விரும்புகிறார்கள். சபை உள்நாட்டு சந்தை வாய்ப்பைக் கூட நிறைவுசெய்யவில்லை. வெளிநாட்டிலும் பனை சார் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி உண்டு.

எமது புலம்பெயர் மக்கள் விரும்பும் பொருட்கள், வெளிநாட்டவர் விரும்பும் பொருட்கள் என சகல பனை சார் உற்பத்திப் பொருட்களும் ஏற்றுமதி செய்ய முடியும்.

பனையின் வேர்கூட தாய்லாந்து நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. தலவிருட்சம் எனப் பெயரிடப்பட்ட புத்தகத்தில் பனையிலிருந்து 801 வகையான பயன்களைப் பெறமுடியும் எனத் தெரிவித்தார். சபையின் கைதடியிலுள்ள பனைவள ஆராய்ச்சி நிலையம் யுத்த காலத்தில் சேதமடைந்து விட்டது.

தற்போது இக்கட்டடத்தின் புனரமைப்புக்கு அரசாங்கத்தினால் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 75 மில்லியன் ரூபாவை இந்திய அரசாங்கம் வழங்குகின்றது.

பனை சார் உற்பத்திப் பொருடகளின் உற்பத்தியில் புதிய இயந்திர சாதன தொழில்நுட்பங்கள் பற்றி அறிந்து, நாமும் துரிதமாக இயந்திரமயப்படுத்தி பனை சார் உற்பத்தியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எமக்கு தேவையான இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதுடன், பனை ஏறும் இயந்திரத்தையும் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் புத்தளம் மாவட்ட மீள்எழுச்சித் திட்டப் பணியாளர் றிஸ்வான், சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# குடாநாடு முழுவதும் மின்வெட்டு அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு முழுவதும் நாளைமறுதினம் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சுன்னாகம் மத்திய மின் நிலைய பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் திருத்த வேலைகள் செய்யும்பொருட்டு ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை யாழ். குடாநாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானின் மானியம் தொடர்ந்தும் கிடைக்கும்

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கம் இலங்கையில் குறைந்த வருமானமுடைய விவசாயிகளுக்கென உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 468 மில்லியன் ரூபா மானியத்தை வழங்கியுள்ளது.

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 820 இரண்டு சக்கர உழவு இயந்திரங்களும், 50 நான்கு சக்கர உழவு இயந்திரங்களும் இதன்பிரகாரம் கிடைக்கப் பெறவுள்ளது.

# பாதிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தியில் நான் அதிகளவு கவனம் செலுத்துவேன்

## பிரதி அமைச்சர் முரளிதரன் பேச்சு

(மட்டக்களப்பு)

எமது பிரதேசம் அபிவிருத்தி அடையவேண்டும் என்பதில் நான் மிகுந்த கவனமாகவுள்ளேன். அந்த வகையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகளை திருத்தியமைக்கவென மீள்குடியேற்ற அமைச்சு மூலம் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை - போரதீவுப்பற்று கல்வி வலயத்திற்கு உட்பட்ட காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயத்தை ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் இணைத்துக் கொள்ள அமைச்சர் மேற்கொண்ட முயற்சிக்குப் பாரட்டும் நிகழ்வு ஒன்றை பாடசாலை சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்தவன் என்ற அடிப்படையில் இப்பிரதேசம் தொடர்பில் நன்கு அறிவேன். அதற்கேற்றாற்போல் நன்கு திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்கொண்டு செல்கின்றேன்.

கடந்த காலத்தில் இப்பிரதேசம் போர் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டது. அந்த நிலைமையிலிருந்து இன்று மாற்றம் பெற்று மக்கள் நிம்மதி பெருமூச்சு விடும் நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். இந்த நிலைமை தொடர்ந்து நீடித்துச் செல்ல வேண்டும்.

எமது பிரதேசம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதில் நான் மிகுந்த கவனமாகவுள்ளேன். அந்த வகையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகளை திருத்தியமைக்கவென மீள்குடியேற்ற அமைச்சு மூலம் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளேன். தொடர்ந்து நாங்கள் அபிவிருத்தியடைய வேண்டும் என்றால் நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலமே எம்மை அபிவிருத்தியடைய செய்ய முடியும்.

அத்துடன் இந்த பாடசாலையின் பல்வேறு குறைகள் தொடர்பில் அதிபர் இங்கு சுட்டிக்காட்டினார். உடனடியாக ஆரம்பக் கட்டணமாக 150,000



ரூபாவை எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கின்றேன்.

தொடர்ந்தும் இப்பகுதி மக்களுக்கு சேவையாற்ற கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

பாடசாலை அதிபர் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்புச் செயலாளர் பொன். இரவீந்திரன் உட்பட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

## முல்லைக்கடலில்...

சென்றுள்ளனர்.

இவர்கள் திரும்பி வராததை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், அவர்கள் பயணித்த படகு கரையொதிங்கிய நிலையில், காணப்பட்டதாக வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். காணாமல் போயுள்ள கடற்படையினரை தேடும் பணிகளில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் இது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன கடற்படையினரை கண்டுபிடிக்க இந்திய கடற்படை மற்றும் கடலோர காவற்படையினரின் உதவிகள் பெறப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## குட்டி உள்ளூராட்சி...

சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தலை ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கலாம். அவ்வாறு ஒத்திவைத்த பின்னர் மீண்டும் ஒரு தேவைக்காக ஒத்திவைக்க நேரிடலாம். அவ்வாறு அடிக்கடி தேர்தலை ஒத்திவைப்பதை விட நேரடியாக ஆறு மாதங்களுக்கு ஒத்திவைப்பது ஏற்றதாகும்.

எனினும் சாத்தியப்படும் பட்சத்தில் ஆறு மாதம் முடிவவைதற்கு முன்னரும் தேர்தலை நடத்தலாம். அதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதுடன் அது குறித்து கவனத்தையும் செலுத்தி வருகின்றதாக என அமைச்சர் மேலும் கூறினார்.

## புனர்வாழ்வு...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர இதனைத் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த 11 ஆயிரம் புலி உறுப்பினர்களில், இன்னும் நான்காயிரம் பேர் மாத்திரமே புனர்வாழ்வளிக்க வேண்டியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## 'சுனாமி'...

தெளிவுப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதற்தர பல்கலைக்கழகம் தரம் மிக்க உயர்கல்வி

## எனது இலக்கு என்கிறார் புதிய துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக மாற்றியமைப்பதே தனது தலையாய பணியாக இருக்கும் என்று யாழ். பல்கலைக்கழக புதிய துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தினமுரசுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று துணைவேந்தர் பதவியைப் பொறுப்பேற்கவுள்ள இந்நேரத்தில் பல்கலைக்கழகத்தில் நிலவிவரும் சகல பிரச்சினைகளையும் மனிதாபிமான முறையில் அணுகி தீர்வுகாண்பதே எனது முதலாவது பணியாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சென்னை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணி பட்டம் பெற்ற நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றி பேராசிரியர் பாலசுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் ஆய்வுகளை மேற்கொண்டு முதுவிஞ்ஞாமாணி பட்டத்தைப் பெற்றுள்ளேன்.

பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், யாழ். பல



கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதியாகவும் 3 வருடங்கள் கடமையாற்றியுள்ளேன்.

இத்தகைய அனுபவங்களைக் கொண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினை சகலரது ஒத்துழைப்புடனும் எதிர்காலத்தில் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் முகமாக தனது பணிகள் தொடருமென்றும் தெரிவித்தார்.

## அபிவிருத்தி...

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'மீள எழுவோம்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள வீதி அபிவிருத்தி, விவசாயம், குளங்கள் புனரமைப்பு, சிறு வீதிகளின் நிர்மாணம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# யுத்தத்தால் சிதைவடைந்த கிளிநொச்சியை கட்டியெழுப்ப விரைந்து செயற்படுங்கள்

## ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கடந்த யுத்த காலத்தின்போது முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தை மீள கட்டியெழுப்பும் வகையில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்தி மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார்அவர்கள் அதிகாரிகளை பணித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

அரசு மீள்குடியேறியுள்ள பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. இருப்பினும் குறித்த காலங்களுக்குள் வேலைத்திட்டங்கள் முடிக்கப்படாமை மக்களை பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளது. அரச நிறுவனங்களின் அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக மக்கள் அரசின் மீது நம்பிக்கை அற்றுப்போகச் செய்கிறது. எனவே அபிவிருத்திப்பணிகளை வெறுமனே கடமையாக அன்றி பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தின் அபிவிருத்திக்காக சேவை மனப்பான்மையுடன் நேரம் காலம் பாராது இப்பிரதேசங்களை மீள கட்டியெழுப்பும் வரை அனைவரும் ஒன்றுபட்டு சேவையாற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், அனைவரும் தங்களுடைய கடமைகளை நேர்த்தியாக மேற்கொள் ளும்போது மக்களின் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், விவசாயம், வீடமைப்பு, நீர்ப்பாசனம் கண்ணி வெடியகற்றல், கால்நடை வளர்ப்பு பிரதேச சபையின் செயற்பாடுகள், கூட்டுறவு அரச சார்பற்ற நிறுவனங்களின்செயற்பாடுகள் காணி உள்ளிட்ட விடயங்களில் கரைச்சி பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளின் கருத்துக்கள் பெறப்பட்டு அவற்றில் குறைகள் கானப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சமூகமளித்திருந்த உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வுகளும் பெறப்பட்டதோடு எதிர்காலத்தில் மேற்கொள்ளபடவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்தும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் வீதி அபிவிருத்தி தொடர்பில் பிரதேச சபையினரையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரையும் அதிகம் கவனம் எடுத்து விரைவாக பணிகளை முடிக்குமாறும் இது தொடர்பில் ஒப்பந்தகாரர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்றும் டிப்போ வீதியினை அம்பாள்குளம் சந்தை வரைக்கும் புழுதி எழாத வகையில் தற்காலிக ஏற்பாடாக தார் ஊற்றி செப்பனிடுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு பணிக்கப்பட்டது.மேலும் அம்பாள்குள சந்தைக்காக தங்களுடைய காணிகளை இழந்த மக்களின் பிரச்சினைகளை ஒரு மாதத் திற்குள் தீர்த்து வைக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது.மேலும் வீதி விளக்கு இரணைமடு சந்தியிலிருந்து பரந்தன் சந்திவரை மின்விளக்கை அமைக்குமாறு வர்த்தக சங்கத்தினர் கோரியதோடு, ஒரு தொகுதி, தாங்கள் கொள்வனவு செய்து தருவதாகவும் தெரிவித்தனர் இதனையடுத்து மிகுதியினை மின்சார சபையினரைப் பொறுப்பேற்று வீதி விளக்குகளை பொருத்துவதற்கும் மின்சாரம் கிடைக்கப்பெறாத பிரதேசங்களுக்கு இயன்றளவு விரைவாக மின்சாரத்தை வழங்குமாறும் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்த



# கட்டு நாயக்காவில் தங்கம் திருட்டு; பொலிஸாரின் வேட்டையில் சிக்கியது

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து காணாமல் போன சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான தங்கம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இத்தங்கம் காணாமல் போனமை தொடர்பாக உள்ளூர் விமான சேவை நிறுவனமொன்றின் ஊழியர்கள் 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் நடத்திய முற்றுகையொன்றின் போது, 22 லட்ச ரூபா பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். தங்க பிஸ்கட்டுகள் சிலவற்றை விற்பனை செய்து பெற்ற பணம் இதுவென பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

செட்டியார் தெருவிலுள்ள நகையகமொன்றின் உரிமையாளர் இறக்குமதி செய்த 5 கோடி பெறுமதியான தங்கம் உட்பட 6 கோடி பெறுமதியான தங்கம் மார்ச் 21 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான சரக்குப் பிரிவு களஞ்சியசாலையில் வைத்து காணாமல் போனமைகுறிப்பிடத்தக்கது. சுமார்15 கிலோ எடையுடைய 126 தங்க பிஸ்கட்டுகளும் நகைகளும் காணாமல் போயிருந்தன.

குற்றப் புலனாய்வுப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். அதேவேளை, இது தொடர்பாக விசாரணைகளுக்காக சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் இருவரை சுங்கப் பணிப்பாளர் நாயகம் சுதர்ம கருணாரட்ன நியமித்திருந்தார்.

# பாகிஸ்தானின் தோல்வியால் ரசிகர்கள் இருவர் மரணம்

இந்தியாவின் மொஹாலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்த அதிர்ச்சியில் பாக்கிஸ்தானைச் சேர்ந்த இருவர் மரணமாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது

பாகிஸ்தானின் பெஸாவாரைச் சேர்ந்த 65 வயதான நபர் ஒருவரும், பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவருமே அவ்வணியின் தோல்வியினால் அதிர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக சகல சமூகங்களை ஒன்றிணைத்து பாரிய போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அரசியல் தேவைக்கு அமைய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் ஒன்றியத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தற்போது மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ் பண்டார தெரிவித்துள்ளார்.

மாணவர் ஒன்றியம் சட்ட விரோத செயற்பாடுகள் எதிலும் ஈடுபடவில்லை. பல்கலைக்கழக நிர்வாகம் சுமத்தும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையுமில்லை எனவும், உபவேந்தர் அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டு, இவ்வாறான பொய்க் குற்றச் சாட்டுகளை தொடர்ந்தும் சுமத்தி வருவதாகவும் சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார்.

### செக்குடியரசின்...

குடியரசின் பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதையும் நினைவு கூர்ந்துள்ளார். இந்தநிலையில் சிறந்த ஒரு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என செக்குடியரசின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வரி அறவீடுகள் விசேட கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வர்த்தகர் சங்கம், வரி செலுத்துவோர் மற்றும் வரி ஆலோசகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி செலுத்துநர் சேவைப்பிரிவின் அனுசரணையுடன் எதிர்வரும் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி திரு. கே. எஸ்.கந்தேகெதர அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே வர்த்தகர்கள், கணக்காளர்கள், பொதுமக்கள் மற்றும் வரி விடயத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் இக் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதன் மூலம் வருமானவரி (IT), தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (NBT), பெறுமதி சேர்வரி (VAT), பொருளாதார சேவைக்கட்டணம் (ESC), முத்திரைத்தீர்வை (Stamp Duty) ஆகியவை தொடர்பான தெளிவான விளக்கங்களையும், கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள திருத்தங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணையாளர் பா. சிவர்ஜி தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கிற்கான அனுமதி இலவசம் என்பதுடன், இது தொடர்பான மேலதிக விபரங்களிற்கு 021-2222076 என்ற தொலைபேசியுடன் தொடர்புகொள்ள முடியும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (29)

☆ உங்கள் பெறுமதியான வாடிக்கையாளரை மகிழ்ச்சிப்படுத்த விரும்புகிறீர்களா?
☆ உங்கள் நிறுவனத்தின் பெயரை ஏதாவது பொருளின் ஊடாக விளம்பரப்படுத்த விரும்புகிறீர்களா?
☆ புதிய வாடிக்கையாளரை நீங்கள் பெற விரும்புகிறீர்களா?
☆ பெறுமதியான வாடிக்கையாளரின் உறவை நீண்டகாலம் பேண விரும்புகிறீர்களா?

JoJeNi Business Gifts

அப்படியாயின் பல முன்னணி நிறுவனங்களிற்கு சேவைவழங்கிய எம்முடன் தொடர்பு கொள்ளவும்
எமது தயாரிப்புகளில் சில
with Logo Printing
T-Shait, Caps,Bage, Clocks, Pens... மேலும் பல (More than 500) Items Available

JoJeNi
Business Gift
36/7c Averiwattaird
wattala.
T.P.: 0115610951
Fax: 0716-123127
Email: Jojeni@sltnet.lk
web: www.jojeni.net
(R/023)

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கற்றலுக்கான சில குறிப்புகள்

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| 01. | சுயசரிதை | :- ஒருவர் தானே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு |
| 02. | சுயநலவாதி | :- தனது நலனை மட்டும் கருதி வாழ்பவன் |
| 03. | ஒத்திகை | :- கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றும் முன்பு பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி |
| 04. | ஊதாரி | :- கண் மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன் |
| 05. | ஆத்திகன் | :- கடவுள் இருக்கின்றார் என நம்புகிறவன் |
| 06. | நாத்திகன் | :- கடவுள் இல்லை என நம்புகிறவன் |
| 07. | நூன்முகம், முன்னுரை | :- நூலாசிரியர் தனது நூலைப்பற்றி நூல் முகத்தில் எழுதும் உரை |
| 08. | அணிந்துரை | :- ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழ் உரை |
| 09. | அலி, பேடி | :- ஆணும், பெண்ணும் அல்லாதது |
| 10. | களஞ்சியம் | :- பொருள், பண்டங்களைச் சேர்த்து வைக்கும் இடம் |
| 11. | கால்கோள் விழா | :- யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்கு முன்பு எடுக்கப்படும் விழா |
| 12. | குருகுலவாசம் | :- மாணவர்கள் குருவுடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல் |
| 13. | கைமருந்து | :- ஒருவர் வைத்தியர் இன்றி தாமே தனது நோய்க்குச் செய்யும் மருந்து |
| 14. | சரணாகதி | :- வேறு துணையில்லாதபோது ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல் |
| 15. | செவிலி | :- வளர்ப்புத் தாய் |
| 16. | தலைமுறை | :- ஒருவர் பிறக்கும் வரையிலிருந்து இறக்கும் வரையிலான காலப்பகுதி |
| 17. | திறைசேரி | :- அரசின் நிதி சம்பந்தமான விடயங்கள் கையாளப்படும் இடம் |
| 18. | தீர்க்கதரிசி | :- எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவன் |
| 19. | சஞ்சீவி | :- உயிர்தரும் கிடைத்தற்கரிய மருந்து |
| 20. | அசகாய சூரன் | :- யாருடைய துணையுமின்றி தனித்துக் காரியத்தை முடிக்கும் திறனுடையவன் |
| 21. | விகடகவி | :- நகையும் பரிகாசமும் சேர்ந்துவர கவி புனையும் ஆற்றலுடைவயவன் |
| 22. | அட்டாவதானி | :- ஒரேநேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 23. | தசாவதானி | :- ஒரே நேரத்தில் 10 விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 24. | சதாவதானி | :- ஒரே நேரத்தில் 100 விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 25. | வெள்ளோட்டம் | :- புதிதாகச் செய்யப்பட்ட கப்பல், தேர் போன்றவற்றை முதன் முதலில் செலுத்திப் பார்த்தல் |
| 26. | நூலகம் | :- வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம் |
| 27. | சுயம்பு | :- ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது |
| 28. | உலோபி | :- தானும் உண்ணாது பிறருக்கும் கொடுக்காது சேர்த்து வைப்பவன் |
| 29. | வேட்பாளர் | :- தேர்தலில் போட்டியிடுபவர் |
| 30. | அநாதை | :- தாய், தந்தையரை இழந்தவர் |
| 31. | சிரஞ்சீவி | :- நெடுங்காலம் உயிர்வாழ்பவர் |
| 32. | அகதி, ஏதிலி | :- பொருள், பண்டம் எல்லாவற்றையும் இழந்து வேறு இடத்தில் வாழ்பவன் |
| 33. | வெள்ளி விழா | :- 25 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 34. | பொன் விழா | :- 50 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 35. | வைரவிழா, மணிவிழா | :- 60 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 36. | பவள விழா | :- 75 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 37. | நூற்றாண்டு விழா | :- 100 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 38. | மஞ்சரி | :- ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து |
| 39. | போலி நகல் | :- ஒன்றைப்போல இருக்கும் வேறு ஒன்று |
| 40. | தீவு | :- நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட தனிப் பிரதேசம் |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II

விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 07



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 01. | அ - D, ஆ - C | 21. | 2 |
| 02. | அ - B, ஆ - A | 22. | 2 |
| 03. | அ - D, ஆ - C | 23. | 3 |
| 04. | அ - B, ஆ - A | 24. | 2 |
| 05. | 3 | 25. | 3 |
| 06. | 2 | 26. | 1 |
| 07. | 1 | 27. | 2 |
| 08. | 4 | 28. | 2 |
| 09. | 2 | 29. | 2 |
| 10. | 1 | 30. | 1 |
| 11. | ◎⊗○ | 31. | 2/16 |
| 12. | ⊙⓪⊙ | 32. | 9 3/16 |
| 13. | ○⓪ | 33. | 6 |
| 14. | மேடைத் தராசு | 34. | 1 |
| 15. | கிலோ மீற்றர் | 35. | 2 |
| 16. | மீற்றர் கோல் | 36. | பேராசை |
| 17. | அளவுநாடா | 37. | ஏற்றினான் |
| 18. | லீற்றர் | 38. | அனுபவம் |
| 19. | அடிமட்டம் | 39. | தையற்காரன் |
| 20. | 3 | 40. | சுதந்திரம் |

## பகுதி -II

**01.**
1. ஆடு 2. உணவுதேடும்போது
3. நரி 4. புற்கள்
5. சுவையான நீரைக் குடிப்பதற்காக
6. 1. விடும் 2. கண்டு
7. ஆடு கிணற்றில் குதித்தது
8. நரிகள் உணவு தேடின
9. 1. ஒளித்து 2. சிறிய
10. நரி வெளியே
11. பொருத்தமான பழமொழிக்குப் புள்ளியிடுக.
12. என்னையும் வெளியே எடுத்துவிடு.

**02.**
1. Books 2. Stamps
3. Mango 4. ஆறுமுகம்
5. திருகோணமலை 6. சரணாலயம்
7. வெளிச்சவீடு 8. பரோபகாரி

**03.**
1. தாய்நாடு
2. மந்தி
3. ஈருடகவழி
4. முண்டம்
5. இலத்தி

**04.**
1. இயற்கையாக உருவாகுதல்
2. ஏமாற்றுதல்
3. ஒரு பொருளை இன்னொரு பொருளாகக் காட்டி ஏமாற்றுதல்.
4. ஒரு கண்டுபிடிப்புத் தொடர்பாக வெளியிடப்படும் கருத்து.

**05.**
1. 2 2. 3
3. 1 4. 1
5. 2 6. 3
7. 2 8. 1
9. 2 10. 2
11. 2 12. 3
13. 3 14. 1
15. 2

**06.**
1. ரோஸ் 2. ரவி
3. 118 cm 4. 90 cm
5. 16 kg 6. ரோஸ்
7. நசார் 8. 8 வயது 9 மாதங்கள

**07.**
1. 7 லீற்றர் 700 மி.லீ 2. 161 மீற்றர்
3. 1.10 4. 4.20
5. 1. $21cm^2$
2. 28 cm

**08.**
1. கருத்துடன் கூடியதெளிவான வசனங்களுக்குப் புள்ளி வழங்குக.

### புள்ளியிடல்

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | | |
| வினா 01 - | 1முதல் 12 வரை | 12 X 2= 24 புள்ளி |
| வினா 02 - | 1முதல் 08 வரை | 08X1= 08 புள்ளி |
| வினா 03 - | 1முதல் 05 வரை | 05 X2= 10 புள்ளி |
| வினா 04 - | 1முதல் 04 வரை | 04 X1= 04 புள்ளி |
| வினா 05 - | 1முதல் 15 வரை | 15 X1= 15 புள்ளி |
| வினா 06 - | 1முதல் 08 வரை | 08X 2= 16 புள்ளி |
| வினா 07 - | 1முதல் 05 வரை | 05 X 2= 10 புள்ளி |
| வினா 08 - | 1முதல் 06 வரை | 06X2 = 12 புள்ளி |
| மொத்தப்புள்ளி | | = 100 புள்ளி |

# கற்றலுக்கான சில குறிப்புகள்

## சுருக்கப் பெயர்கள்

01. மு.ப. :- முற்பகல்
02. பி.ப. :- பிற்பகல்
03. கி.பி. :- கிறிஸ்துவுக்குப் பின்
04. கி.மு :- கிறிஸ்துவுக்கு முன்
05. இ.மி.ச. :- இலங்கை மின்சார சபை
06. ப.த. :- பதிவுத் தபால்
07. அ.ப. :- அரச பணி
08. சு.தி :- சுகாதாரத் திணைக்களம்
09. க.தி :- கல்வித் திணைக்களம்
10. உ.க.ப :- உதவிக் கல்விப் பணிப்பாளர்
11. சா.த :- சாதாரண தரம்
12. உ.த :- உயர்தரம்
13. ஐ.நா. :- ஐக்கிய நாடுகள்
14. ச.தொ.தா :- சர்வதேச தொழிலாளர் சம்மேளனம்
15. ச.நா.நி :- சர்வதேச நாணய நிதியம்
16. உ.உ.தி. :- உலக உணவுத் திட்டம்
17. உ.சு.தா. :- உல சுகாதார தாபனம்
18. வ.க.ப. :- வலயக் கல்விப் பணிப்பாளர்

## சரியான விடையைத் தெரிவு செய்க.


01. வானில் எப்போதும் காணப்படுவது
    1. சூரியன் 2. சந்திரன் 3. வெளி
02. பாடசாலையில் எப்போதும் இருப்பது
    1. கட்டடம் 2. அதிபர் 3. ஆசிரியர்
03. படகு ஓட்டுவதற்குத் தேவையானது
    1. பாய் 2. துடுப்பு 3. மரம்
04. கதிரையொன்றில் எப்போதும் காணப்படுவது
    1. பிரம்பு 2. குசன் 3. கால்
05. நாய் எந்நேரமும்
    1. குரைக்கும் 2. வாலையாட்டும் 3. நாலுகால் பிராணி
06. புகையிரதத்தில் காணப்படாதது.
    1. சில்லு 2. டயர் 3. இருக்கை
07. நாட்காட்டியொன்றில் இருக்க வேண்டியது.
    1. எண்கள் 2. முள் 3. படம்






# கற்றலுக்கான சில குறிப்புகள்


**கீழ்வரும் உருக்களில் ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.**




(1) (2) (3) (4) (5)




(1) (2) (3) (4) (5)



(1) (2) (3) (4) (5)



(1) (2) (3) (4) (5)



(1) (2) (3) (4) (5)

விடைகள் I,II ☆ தரம் 05-2011 ☆ கல்வி முரசு